REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 செப்டெம்பர் 14 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 217 | Wednesday 14, September, 2022 | 16பக்கங்கள் | 40/-

### மின்சார வாகன அனுமதி பெற
## மூன்று தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்




மின்சார வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவது தொடர்பான பிரச்சினைகளைக் தெரிவிப்பதற்கும் தகவல்களை பெறவும் மூன்று தொலைபேசி இலக்கங்களை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு 06



ஆறாவது தடவையாகவும் ஆசிய கிண்ணத்தை வென்ற இலங்கை கிரிக்கெட் அணி நேற்று நாட்டை வந்தடைந்தது. விமான நிலையத்திலிருந்து திறந்த வாகனத்தில் அழைத்துவரப்பட்ட அவர்களுக்கு வழிநெடுகிலும் மக்கள் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்பளித்தனர்.

## தாமரைக் கோபுரம் நாளை 15ஆம் திகதி முதல் இயங்கும்

### பார்வையிட மக்களுக்கு சந்தர்ப்பம்



இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டடமான 'தாமரை கோபுரத்தின்' செயற்பாடுகள் நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய கட்டணங்களை செலுத்தி சகலருக்கும் தாமரை கோபுரத்திற்குள் பிரவேசித்து அதனை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் 06



ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் வென்று நேற்று நாட்டை வந்தடைந்த இலங்கை அணியினர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டபோது....

# உணவுப் பாதுகாப்பு, போஷாக்கு; உறுதி செய்ய கூட்டுப் பொறிமுறை

### ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று ஆரம்பித்து வைப்பு



- உணவுப் பாதுகாப்புக்காக 07 குழுக்கள்
- போஷாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்யவும், உணவுப் பாதுகாப்புக்கும் முன்னுரிமை
- விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரம்
- பெரும்போகத்தில் பெரும் விளைச்சலை பெற தேவையான விவசாயப் பொருட்கள்
- 2025ஆம் ஆண்டுக்குள் உணவுத் தேவைகளை உள்நாட்டிலேயே பூர்த்தி செய்ய திட்டம்

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்ய, கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையங்களை வலுவூட்டும் பல்துறைசார் கூட்டுப் பொறிமுறையொன்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (13) ஆரம்பித்து வைத்தார். எந்தவொரு நெருக்கடியான நிலையிலும் மக்கள் ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்காக சமூக பொருளாதார சூழலை உருவாக்குவதே இதன் எதிர்பார்ப்பாகும்.

"உணவு இன்மையால் எந்தவொரு குடிமகனும் பட்டினியால் வாடக்கூடாது" மற்றும் "எந்தவொரு குழந்தையும் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கக்கூடாது" என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும்.

இந்தப் பொறிமுறை ஏழு குழுக்களின் ஊடாக 06



எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு:
19 ஆம் திகதி திங்களன்று அரச விடுமுறை தினம் 03



மக்களுக்கு தேவையான மருந்துகளை வழங்க உச்ச நடவடிக்கை எடுக்கவும் 03



அமைச்சின் வேலைப்பளுவை குறைக்கவே இராஜாங்க அமைச்சர்கள் 03

## ஜெனிவாவில் சீனா இலங்கைக்கு ஆதரவு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலக சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி சென் சூ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், நல்லிணக்கத்தை பாதுகாக்க இலங்கை 06

## அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு அனைத்தும் தற்காலிக நிறுத்தம்

### அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரச சேவையில் அத்தியாவசியமற்ற ஆட்சேர்ப்புக்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் சில அரச நிறுவனங்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசிய தேவைகள் ஏற்படும் போது அரச துறையில் மேலதிகமாக வுள்ள பிரிவுகளிலிருந்து ஊழியர்களை அதற்காக ஈடுபடுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை 06

### இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு:
## சீனா, இந்தியா, ஜப்பானுடன் 'லெசார்ட்' பேச்சுவார்த்தை

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடன்களை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் நிதி ஆலோசகராக செயற்படும் லெசார்ட் நிறுவனம், சீனா, ஜப்பான் மற்றும் இந்திய அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

அதற்கான நோக்கங்களில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலேயே மேற்படி 06

## தேவையான அளவு Gas கையிருப்பில் உள்ளது

### தட்டுப்பாட்டுக்கு இடமில்லை -லிற்றோ தலைவர்



லிற்றோ நிறுவனத்திடம் போதியளவான எரிவாயு கையிருப்பில் உள்ளதால் தட்டுப்பாடின்றி தொடர்ந்தும் மக்களுக்குத் தேவையான கேஸை வழங்க முடிந்துள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சுமார் ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விடப்படுவதாக தெரிவித்துள்ள அவர், லிற்றோ நிறுவனம் செலுத்த வேண்டியிருந்த கடனை 06

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நட்ட ஈடு வழங்க முடியும்



### சட்டமா அதிபர் அரசுக்கு எதிரான வழக்குகளை செல்லுபடியற்றதாக்குமாறு வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கிணங்க நட்ட ஈடு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள சட்டமா அதிபர் அந்த வகையில் அரசாங்கத்திற்கு எதிராக 06

## போராட்டங்களுக்கு விரைவில் புதிய இடம்

### சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



இளைஞர்களுக்கு தமது போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புதிய இடமொன்று விரைவில் வழங்கப்படும் என ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள மிதக்கும் சந்தையை அண்மித்த இடம் விரைவில் போராட்டத்திற்கு வழங்கப்படும் இந்த இடத்தில் கலைக் கண்காட்சிகள், இலக்கிய விழாக்கள், 06

## அதிக விலைக்கு முட்டை விற்ற 80 வர்த்தகர்கள்

### நுகர்வோர் அதிகார சபையில் வழக்கு பதிவு



அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

50 ரூபாவுக்கு அதிகமாக முட்டையை விற்பனை செய்வோரை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் 06

### தேர்தலை நடத்தி அதிகாரத்தை பகிரவும்:
## நம்பகரமான நடவடிக்கை முன்னெடுப்பது அவசியம்

### இலங்கையை வலியுறுத்தும் இந்தியா



தேர்தலை முன்கூட்டியே நடத்துவதன் மூலம் அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபைகளை செயற்படுத்துவதற்கேதுவாக உடனடி மற்றும் நம்பகமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தியா இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் 06















இலங்கை வந்தடைந்த 2022 ஆசிய கிரிக்கெட் கிண்ண வீரர்கள் மற்றும் 12ஆவது ஆசிய வலைப்பந்து சம்பியன் பட்டம் வென்ற இலங்கை வீராங்கனைகள் நேற்று (13) அதிகாலை இலங்கை வந்தடைந்தனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து பிரம்மாண்டமாக வரவேற்கப்பட்ட அவர்கள், விசேட பஸ் மூலம் வாகன பேரணியாக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். இதன்போது, வீர வீராங்கனைகள், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மைட்லண்ட் பிளேஸில் உள்ள இலங்கை கிரிக்கெட் தலைமை அலுவலகம் மற்றும் விளையாட்டு அமைச்சின் வளாகத்தில் உள்ள வலைப்பந்து சம்மேளன தலைமையகத்திற்கு விசேட வாகனப் பேரணியாக அழைத்து வரப்பட்டனர்.






# சர்வதேச செய்திகள்

## மகாராணி சார்பில் உம்ரா யாத்திரை வந்தவர் கைது



காலஞ்சென்ற இரண்டாம் எலிசபெத் மகாராணிக்காக உம்ரா வழிபாட்டில் ஈடுபட முஸ்லிம்களின் புனித தலமான மக்காவுக்கு பயணித்த ஆடவர் ஒருவரை சவூதி அரேபிய நிர்வாகம் கைது செய்துள்ளது.

யெமன் நாட்டைச் சேர்ந்த அந்த ஆடவர் முஸ்லிம் அல்லாதோருக்கு தடுக்கப்பட்ட மக்கா பெரிய பள்ளிவாசலில் இருந்து கடந்த திங்கட்கிழமை சமூக ஊடகத்தில் வெளியிட்ட வீடியோ பதிவில், மகாராணிக்காக தாம் உம்ரா செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார். மக்கா யாத்திரையில் ஈடுபடுபவர்கள் பதாகைகள் அல்லது கோசங்களை மேற்கொள்வதற்கு தடை உள்ளது. இதனை மீறியதற்காகவே அவர் கைது செய்யப்பட்டதாக சவூதி நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

## மகாராணி போன்று ஆடை அணிந்தவருக்குச் சிறை



தாய்லாந்து மகாராணி போன்று ஆடை அணிந்ததற்காக அந்நாட்டு செயற்பாட்டாளர் ஒருவருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு பாங்கொக்கில் இடம்பெற்ற அரசியல் ஆர்ப்பாட்டம் ஒன்றில் இளஞ்சிவப்பு ஆடை ஒன்றை அணிந்திருந்த 25 வயது ஜடு போர்ன் நியு சியோங், அந்த ஆடை மூலம் அரச குடும்பத்தை அவமதித்ததாகக் குற்றங்காணப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த அவர், தாம் பாரம்பரிய ஆடை ஒன்றையே அணிந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் தாய்லாந்து மன்னர் மற்றும் அரச குடும்பத்தின் ஏனையவர்களை விமர்சிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதோடு அதற்கு எதிராக சட்டம் கடுமையாக உள்ளது.

## பாக். வெள்ளத்தால் 3.5 மில். சிறுவர்களின் கல்வி பாதிப்பு



பாகிஸ்தனுக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளார். இந்த இயற்கை அனர்த்தத்தால் பாகிஸ்தானில் சுமார் 3.5 மில்லியன் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ.நா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரண்டு நாள் விஜயமாக பாகிஸ்தான் சென்ற குட்டரஸ் கடந்த சனிக்கிழமை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார். இதன்போது சர்வதேச நிதி உதவிகளை அதிகரிப்பதற்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

## 2ஆம் எலிசபெத் மகாராணியின் பூதவுடல் லண்டனை அடைந்தது

காலஞ்சென்ற இரண்டாம் எலிசபெத் மகாராணியின் பூதவுடல் தாங்கிய பேழை நேற்று (13) லண்டன் நகரை அடைந்தது. வரலாற்று முக்கியம் வாய்ந்த எடின்பரோ தேவாலயத்தில் 24 மணி நேரம் வைக்கப்பட்ட நிலையிலேயே பூதவுடல் லண்டனுக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

மகாராணியின் சவப்பெட்டி எடின்பரோ விமான நிலையத்திலிருந்து பக்கிங்ஹாம் மாளிகைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று புதன்கிழமை பிற்பகல், அது வெஸ்ட்மின்ஸ்டர் அரங்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பிரிட்டிஷ் நேரப்படி மதியம் 3 மணியளவில் அங்கு சென்றடையும். இறுதிச் சடங்குக்கு முன், நான்கு நாட்களுக்கு ராணியின் சவப்பெட்டி வைக்கப்படும்.

எதிர்வரும் 19ஆம் திகதி காலை 11 மணிக்கு மகாராணியின் பூதவுடல் நீண்டதூர ஊர்வலமாக விண்ட்சர் கோட்டையை சென்றடையும். விண்ட்சரில் உள்ள அரசர் ஆறாம் ஜோர்ஜ் நினைவு தேவாலயத்தில் ராணி அடக்கம் செய்யப்படுவார்.



## பதிலமைச்சரவையுடன் இயங்கும் தலிபான்கள்



ஆப்கானிஸ்தானின் ஆட்சியைப் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்கு மேலாகியும் தலிபான்கள் உத்தியோகபூர்வ அமைச்சரவையை அறிவிக்கத் தவறியுள்ளமை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தலிபான்கள் ஆப்கானின் ஆட்சியை கடந்த ஆண்டு (2021) ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் கையேற்றனர். அதனைத் தொடர்ந்து பதிலமைச்சரவை அமைக்கப்பட்டது. அந்த அமைச்சரவையும் பதிலமைச்சர்களும் ஒரு வருடத்திற்கும் மேலாக செயற்படுகின்ற போதிலும் உத்தியோகபூர்வ அமைச்சரவை நியமிக்கப்படாமை பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது என்று டோலோ நியூஸ் சுட்டிக்காட்டியுள்ளது.



## அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா கட்டுப்பாடு: விலை உயர்வு

உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதி நாடான இந்தியா தனது குருணை அரிசி ஏற்றுமதிகளைத் தடை செய்துள்ளதோடு மற்ற அரிசி வகைகளின் ஏற்றுமதிகளுக்கான சேவை வரியை 20 வீதம் உயர்த்தியுள்ளது.

அதன் காரணமாக வியட்நாம், தாய்லாந்து, மியன்மார் போன்ற மற்ற நாடுகளின் அரிசி விலைகள் ஏற்றம் கண்டுள்ளன. ஆசியாவில் அரிசி விலை 5 வீதம் அதிகரித்துள்ளது. அது, இவ்வாரப் பிற்பகுதியில் தொடர்ந்தும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் மொத்தம் ஏற்றுமதியாகும் அரிசியில் இந்தியா 40 வீதம் பங்களிக்கிறது. 2007இல் இந்தியா அதன் அரிசி ஏற்றுமதிகளைத் தடைசெய்த போது உலகளவில் அரிசி விலைகள் ஒரு தொன்னுக்கு 1,000 டொலர் வரை உயர்ந்தது.

## உலகில் நவீன அடிமைகள் பத்து மில்லியன் அதிகரிப்பு

உலகளவில் அடிமைகளாக இருப்போர் எண்ணிக்கை 50 மில்லியன் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் எல்லா வகையான நவீன அடிமைத்தனத்தையும் ஒழிக்க ஐ.நா இலக்குக் கொண்டுள்ளது.

ஆனால் 2016ஆம் ஆண்டுக்கும் 2021ஆம் ஆண்டுக்கும் இடையே கட்டாயத் திருமணத்துக்கும் கட்டாய வேலைக்கும் ஆட்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை 10 மில்லியன் அதிகரித்ததாக ஐ.நா அறிக்கை கூறுகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட ஆய்வின்படி, 28 மில்லியன் பேர் கட்டாய வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும் 22 மில்லியன் பேருக்குக் கட்டாயத் திருமணம் செய்துவைக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 செப்டெம்பர் 14 புதன்கிழமை



**தொழுகை நேரம்**

12 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.08 |
| அஸர் | 03.14 |
| மஃரிப் | 06.13 |
| இஷா | 07.23 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 29

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | நிறைவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | சுகம் |
| விருச்சிகம் | செலவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | நன்மை |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# அமைச்சர்களின் வேலைப்பளுவை குறைக்கவே இராஜாங்க அமைச்சர்கள்

## பிரத்தியேக நிதிஒதுக்கீடு எதுவும் கிடையாது



இராஜாங்க அமைச்சுக்களுக்கு பிரத்தியேக நிதி ஒதுக்கீடு கிடையாது, அமைச்சர்களின் வேலைப்பழுவை குறைப்பதற்காகவே இராஜாங்க அமைச்சு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை மிகக்குறைந்தளவான அமைச்சர்களைக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு அமைச்சர்களுக்குமான பொறுப்புக்கள் அதிகரித்துள்ளன. இதனால் அவர்களுக்கு காணப்படும் வேலைப்பளுவைக் கட்டுப்படுத்துவதற்காகவே இராஜாங்க அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு பிரத்தியேகமாக நிதி ஒதுக்கிடப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இவ்விடயத்தை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதுள்ள அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையின் போது அவர்களுக்கு

06

### எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு:

# 19 ஆம் திகதி திங்களன்று அரச விடுமுறை தினம்

தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தியுள்ள 19ஆம் திகதியை விசேட அரச விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிக் கிரியை நடைபெறுவதையிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக,உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினம், தேசிய துக்க தினமாக முன்னதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க விடுமுறை தினம் தடையாக இருக்கமாட்டாதென பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சர்வதேசத்தின் இறக்குமதி ஒப்பந்தத்தில்

# சமையல் எரிவாயு கொள்வனவில் மோசடி இடம்பெற வாய்ப்பில்லை

## லிற்றோ நிறுவனம் விளக்கம்

சமையல் எரிவாயு இறக்குமதி தொடர்பிலான ஒப்பந்தத்தின் போதும், சர்வதேசத்திடமிருந்து சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்யும் போதும், இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள உலக வங்கியின் நிதி, மோசடி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதென லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிற்றோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிற்றோ சமையல் எரிவாயு நிறுவனம், சமையல் எரிவாயு கொள்வனவின் போது முழுமையாக வெளிப்படைதன்மையை பின்பற்றுகின்றது.




அது மாத்திரமன்றி உலக வங்கியின் கண்காணிப்பின் கீழ் அனைத்து கொள்வனவு மற்றும் பணக்கொடுப்பனவுகளும் இடம்பெறுகின்றன. சர்வதேசத்திடமிருந்து சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்யும்போது அனைத்து நடவடிக்கைகளும் அரச திறைசேரியின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

06

### பாரம்பரிய சட்ட திட்டங்கள், விதிமுறைகளை தளர்த்தி

# மக்களுக்கு தேவையான மருந்துகளை வழங்க உச்ச நடவடிக்கை எடுக்கவும்

## சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்பு

மக்களின் உயிர் ஏனைய எல்லாவற்றையும் விட விலை மதிப்பற்றது. எனவே சில பாரம்பரிய சட்ட திட்டங்கள், மற்றும் விதிமுறைகளை தளர்த்தி மக்களுக்குத் தேவையான மருந்து வகைகளை வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

தேவையான நிதி ஒதுக்கப்பட்டாலும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு சுகாதாரத் துறையிலுள்ள சம்பந்தப்பட்ட துறைகளே பொறுப்பேற்க

06



### கோணேஸர் ஆலய வளாக பிரச்சினை

# அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு அனைவரது ஆதரவும் தேவை

## இந்து மத பீடம் கோரிக்கை

கோணேஸ்வர ஆலய வளாக பிரச்சினையை தீர்க்க அனைவரும் பக்க கலமாக இருந்து நாட்டின் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தும் வண்ணம் சுமுகமான நடவடிக்கைகளுக்கு எல்லா தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டுமென சர்வதேச இந்து மத பீடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் தலைமையின் கீழ் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் பொழுது திருகோணேஸ்வர ஆலய விவகாரம் சம்பந்தமாக எடுத்துரைத்ததுடன் மதங்களுக்கு புண்படுத்தும் வண்ணம் யாரும் நடக்க கூடாது. அது எந்த மதமாக இருந்தாலும் எந்தவொரு மதத்தினரையும் உணர்வு ரீதியாக பாதிக்கப்படும் செயலை அனுமதிக்க கூடாது என்ற கருத்தினை வலியுறுத்தி ஜனாதிபதியிடம் இது சம்பந்தமாக தெரிவித்து இருந்தார் .

இதன் பொழுது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இது பற்றி தான் அறிந்து கொண்டதாகவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை எடுப்பதாகவும் கூறியிருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் புத்தசாசன மத விவகார மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்ரம நாயக்காவுடன் சேர்ந்து நேரடியாக இந்த ஆலயத்திற்கு சென்று அங்குள்ள பிரச்சினைகளை ஆராய்வதாகவும் தெரிவித்து இருந்தார். இவர்களின் செயற்பாட்டுக்கு அனைவரும் பக்கபலமாக இருந்து நாட்டின்

06

# விவசாய அமைச்சர் அமரவீரவுடன் இராஜாங்க அமைச்சர் சந்திப்பு



தற்போது கிழக்கிலுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் உரப் பிரச்சினை தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை விவசாய அமைச்சில், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எதிர்வரும் பெரும் போகத்துக்கு தேவையான யூரியா சுமார் எட்டாயிரம் 8,000 மெற்றிக் தொன் மற்றும் குடலப் பசளை சுமார்

06

# உணவு ஆணையாளர் திணைக்களத்துக்கு 10 கோடி 94 இலட்சம் ரூபா நிலுவை

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உணவு ஆணையாளர் திணைக்களம் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள 66 களஞ்சியசாலைகளுக்கான நிலுவைப் பணமாக 10 கோடி 94 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாவை அறவிடவேண்டியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மேற்படி தொகையை குத்தகை வருமானமாக அறவிட வேண்டியுள்ளதாக அந்த அலுவலகம் தெரிவித்தது.

உணவு ஆணையாளர் திணைக்கதிற்கு சொந்தமான 66 களஞ்சியசாலைகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, 16 களஞ்சியசாலைகளுக்கு மூன்று மாதங்களாக வழங்கப்படாத நிதியாக 36,647,433 ரூபா அறவிடப்படவேண்டியுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு அலுவலகம் வழங்கியுள்ள தகவல்களுக்கிணங்க 12 அரச நிறுவனங்கள் 123 கட்டடங்கள் கடந்த காலங்களில் வெளியாருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அதில் 10 அரச நிறுவனங்கள் 87 கட்டடங்கள் வெளியாருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட போதும் அதற்கான குத்தகை வருமானம் அரச மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் மேற்படி அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, 08 அரச நிறுவனங்கள் 85 கட்டடங்கள் தனியார் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 95 வீதமானவை குத்தகை வருமான பெறுமதியை மதிப்பீடு செய்திருக்கவில்லை என்பதையும் அந்த அலுவலகம் குறிப்பிட்டது.

# ஆர்ப்பாட்டக்காரர்களுக்காக புத்தாக்க நிர்மாண வலயம்

## புறக்கோட்டை மிதக்கும் வர்த்தக தொகுதி பகுதியில் அமைக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆர்ப்பாட்டக்காரர்கள் புதிய நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் கொழும்பு கோட்டையிலுள்ள மிதக்கும் வர்த்தக தொகுதி பிரதேசத்தில் நிர்மாண வலயமொன்றை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஆளணி பிரதான முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இளைஞர் சமூகம் மற்றும் அரச தொழில் முயற்சியாளர்களின் ஒத்துழைப்புடன் அந்த நிர்மாண வலயம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கலை, இலக்கியம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுதந்திரமாக சந்தித்து சுயாதீனமாக கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுதல் மற்றும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு பொருத்தமான வகையில் அந்த நிர்மாணிப்பு வலயம் உருவாக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் அதற்கு மேலதிகமாக ஓவியக் கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதியான பகுதி பிரிவுகளும் சிற்றுண்டிச்சாலை வசதிகளும் அதில் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் இளைஞர் யுவதிகளில் பெரும்பாலானோர் புதிய கருத்துக்களுடன் புத்தாக்க செயற்பாடுகளில் திறமை படைத்தவர்களாக காணப்படுகின்றனர் என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அவர்களது திறமைகளை மேம்படுத்திக்கொள்வதற்கு இந்த செயற்றிட்டம் உறுதுணையாக அமையுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### ஜய்க்கா மற்றும் ஐ.நா அபி. திட்டம்

# 200 மெ.தொன் விதைச்சோளம் இலங்கைக்கு வழங்க இணக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெரும்போகத்தில் சோளப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் நோக்கில் 200 மெற்றிக் தொன் விதைச் சோளத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஜய்க்கா மற்றும் ஐ.நா அபிவிருத்தி திட்டம் ஆகியவை இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த செயற்பாட்டின் கீழ் 1.8 மில்லியன் டொலர் பெறுமதியான ஹைபிரைட் ரக விதை சோளத்தை பெற்றுக்கொடுப்பதற்கு அந்த நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போகத்தில் 15,000 ஹெக்டயாரில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக இந்த விதைச் சோளம் பயன்படுத்தப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான இணக்கப்பாட்டு பேச்சுவார்த்தையொன்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது. அந்த நிகழ்வில் அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்துகொண்டுள்ளதுடன் ஜய்க்கா நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யமடா டெற்சுயா மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான அலுவலக பிரதானி மலின் ஹார்விக் மற்றும் விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் காமினி சமரசிங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

### மருந்து பொருட்கள் கொள்வனவுக்காக

# சுகாதார அமைச்சுக்கு மேலும் 100 மில்லியன் டொலர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுகாதார அமைச்சுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 100 மில்லியன் அமெரிக்கன் டொலரை விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றைய தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது, பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

மருந்துகள் கொள்வனவு தொடர்பில் சுகாதார அமைச்சு அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் நிதியத்தின் கீழ் செயற்படும் கொழும்பு நகர புத்தாக்க திட்டம் மற்றும் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் 100 மில்லியன் அமெரிக்க டொலரை இவ்வாறு அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக உபயோகப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு கையிருப்பு தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு அரசாங்கம் மேற்படி தீர்மானத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.36 | 256.01 |
| கனடியன் டொலர் | 273.95 | 286.57 |
| யூரோ | 360.97 | 376.37 |
| ஜப்பான் யென் | 2.5012 | 2.6050 |
| சிங்கப்பூர் டொலர் | 255.02 | 265.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 417.17 | 433.79 |
| சுவிஸ் பிராங்க் | 372.95 | 390.96 |
| அமெரிக்க டொலர் | 358.78 | 369.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.92 | கட்டார் ரியால் | 98.89 |
| குவைத் டினார் | 1,175.32 | சவூதி ரியால் | 96.40 |
| ஓமான் ரியால் | 940.98 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 96.63 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 29ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 17

### குறள் தரும் சிந்தனை



கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்

கற்றவரின் முன் தாம் கற்றவற்றை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரினும் மேலானவராக மதித்துச் சொல்லப்படுவார்.

## இலங்கையின் இறையாண்மை மீறப்பட இடமளிக்கலாகாது!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வு அதன் தலைவர் பெட்றிகோ வில்லெகஸ் தலைமையில் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளது பிரதிநிதிகளின் பங்குபற்றுதலோடு ஆரம்பமான இவ்வமர்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினர் பங்குபற்றியுள்ளனர்.

இந்த அமர்வின் தொடக்க நாளான நேற்றுமுன்தினம் பதில் ஆணையாளர் நாடா அல் நாஷிப், இலங்கை குறித்த அறிக்கையை வாசித்தார். இந்த அறிக்கையில் பொருளாதாரக் குற்றங்கள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அத்தகைய குறிப்பு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நியாயாதிக்கத்தை மீறுவதாக சுட்டிக்காட்டப்பட்டு, இலங்கை தரப்பில் கவலையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்த அமர்வில் பிரித்தானியா தலைமையில் இணை அனுசரணை நாடுகள் 46/1 தீர்மானத்தை கொண்டு வந்துள்ளன. இத்தீர்மானமோ இலங்கை மக்களின் இறைமையையும் ஐக்கிய நாடுகள் சாசனத்தையும் மீறும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அத்தீர்மானத்தை முற்றாக நிராகரிப்பதாகவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்படும் பரிந்துரைகள், முடிவுகளைத் திட்டவட்டமாக நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இத்தீர்மானம் தொடர்பில் எந்தவொரு தொடர் நடவடிக்கையும் உயர்ஸ்தானிகரால் முன்வைக்கப்படும். அது குறித்த பரிந்துரைகள் மற்றும் முடிவுகளையும் உறுதியாக நிராகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இலங்கை இருப்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின், இந்த 51 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் வாசிக்கப்பட்டுள்ள அறிக்கையும், இங்கு கொண்டு வரப்பட்டுள்ள 46/1 தீர்மானமும் இலங்கை மக்களின் இறைமையையும் ஐ.நா. வின் கோட்பாடுகளையும், மனித உரிமைகள் பேரவையின் நியாயாதிக்கத்தையும் மீறும் வகையில் அமைந்திருப்பது இலங்கை தரப்பில் எடுத்துக் கூறப்பட்டு, முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையானது இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட சுதந்திர நாடாகும். அதனால் இந்நாட்டின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் மீறும் வகையிலான எந்தத் தீர்மானத்தையும் அங்கீகரிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாது. அந்த வகையில் அமைச்சர் அலி சப்ரி 46/1 தீர்மானத்தை முற்றாக நிராகரித்துள்ளதோடு ஐ.நா சாசனமும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நியாயாதிக்கம் மீறப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சரின் பிரதிபலிப்புக்களை மக்கள் வரவேற்றுள்ளனர். நாட்டினதும் நாட்டு மக்களினதும் நிலைப்பாட்டை அவர் இந்த சர்வதேச அமர்வில் துணிந்து வெளிப்படுத்தியுள்ளார். அதனையிட்டு அவரது பிரதிபலிப்பை நாட்டை உண்மையாக நேசிக்கும் மக்கள் வரவேற்று பாராட்டியுள்ளனர்.

மேலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது ஐ.நா. சபையின் கீழான ஓர் அமைப்பாகும். அதனால் அப்பேரவை ஐ.நா. சாசனத்தை மதித்து செயற்பட வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. அது எச்சந்தர்ப்பத்திலும் அதனை மீறும் வகையில் செயற்பட முடியாது. அத்தோடு தமது நியாயாதிக்கத்தை மீறி செயற்படவும் இந்நிறுவனத்திற்கு இடமளிக்கப்படவில்லை.

இருந்த போதிலும் இந்த 51 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் இந்த இரண்டும் மீறப்பட்டுள்ளன. இது கவலைக்குரியதும் கண்டனத்திற்குரியதுமான விடயமாகும். ஐ.நா. சாசனத்தை மீறும் வகையில் செயற்படுவதானது ஐ.நா. மீதான நம்பிக்கையையும் அதன் அபிமானத்தையும் பாதிப்பதாகவே அமையும். அத்தோடு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நியாயாதிக்கத்தை மதிக்காமல் செயற்படுவது என்பது அதன் பரப்பெல்லையை புரிந்து கொள்ளாதவர்களின் வெளிப்பாடாகவே இருக்கும்.

அதனால் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எவ்வாறு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பில் ஐ.நாவும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையும் உரிய கவனம் செலுத்த வேண்டும். ஐ.நா சாசனம் உச்சளவில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அந்நிறுவனங்கள் தொடர்பில் மக்கள் கொண்டுள்ள நம்பகத்தன்மையில் களங்கம் ஏற்படலாம். அதனால் ஓரிருவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப சர்வதேச அமைப்புகள் பயன்படுத்தப்பட இடமளிக்கப்படலாகாது.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையைத் தனிமைப்படுத்துவதற்கான உள்நோக்கம் கொண்ட முயற்சியாகக் கூட இருக்கலாம். அதனால் இலங்கை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஐ.நாவும் ஐ.நா மனித உரிகைகள் பேரவையும் கவனம் செலுத்த முன்வர வேண்டும். அதுவே இலங்கை மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வீட்டுத் தோட்ட ஊக்குவிப்புத் திட்டம்

நாட்டில் நிலவுகின்ற உணவுப் பொருள் பற்றாக்குறை மற்றும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'தொலஸ் மகே பஹன' வேலைத்திட்டம்_2022 இன் கீழ் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் தற்பொழுது அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் உணவுப்பற்றாக்குறை போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு மக்கள் தங்களது பொருளாதாரத்தை தாங்களாகவே முன்னேற்றுவதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதுடன், வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதோடு ஒவ்வொரு வீட்டிலும் இத்திட்டத்தினை செய்படுத்துவதே நோக்கமாகும்.

இத்திட்டத்திற்கு அமைவாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கலைஞர்கள், கலைமன்றங்களின் உறுப்பினர்களுக்கு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் செயலமர்வு நடத்தப்பட்டு வருகின்றது. பயிர்ச் செய்கைக்கான விதைகள் அடங்கிய பொதிகள் மற்றும் பயிர்க்கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.





இதன்போது நிகழ்வில் கலந்து கொண்ட பயணாளிகளுக்கு வீட்டுத்தோட்டம் செய்தல் மற்றும் பராமரிப்பு, பொருளாதாரத்தை விருத்தி செய்தல் தொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களினால் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஐ.ஏ.ஹமீட், விவசாய போதனாசிரியர்களான எம்.எச்.எம்.அப்துல்லா, ஏ.எச்.ஏ.முபாறக், அட்டாளைச்சேனை பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம். பற்பராசா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சித்தி றஜாயி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
*(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)*

# குடைச்சாமி சித்தரின் திருவுருவச் சிலை காரைதீவில் பிரதிஷ்டை

கிழுங்கையின் புகழ் பூத்த சித்தராக விளங்கிய குடைச்சாமி சித்தரின் திருவுருவச்சிலை காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சித்தரின் சர்வமத பீடத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. அந்த பீடத்தின் பொறுப்பாளர் சுவாமி ஜீவாகரன் தலைமையில் அதிகாலை 4 மணிக்கு திருவுருவச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிரதம குரு சிவஸ்ரீ கிருஷ்ண வாசுதேவ சர்மா தலைமையில் உதவிக்குரு தங்கராஜா விந்தியன் உதவியுடன் யாகம், அபிஷேகம், கிரியைகள் இடம்பெற்றன. இலங்கையில் குடைச்சாமி சித்தரின் முதலாவது திருவுருவச் சிலை காரைதீவில் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



குடைச்சாமி சித்தர் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று மக்களுடன் வாழ்ந்து அருள் ஆசி வழங்கியவுடன் மக்களின் துன்பங்களையும் தீர்த்து தனது சித்துக்களை மேற்கொண்டவர். இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுக்கும் சென்று பல வித்தைகளை கற்று பல விசேட நன்மைகளை மக்களுக்கு உணர்வுடன் செயல்படுத்தியவர்.

குடைச்சாமி சித்தரின் பிரதான சீடரான சுவாமி ஜீவாகரன் காரைதீவு.08 கடற்கரை வீதியில் சிவசக்தி குரு குடைச்சாமி சித்தரின் சர்வமத பீடத்தை கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வருகிறார். அவரின் குரு பக்தியின் வெளிப்பாடாக இந்த திருவுருவச் சிலை இந்திய சிற்பிகளால் வடிவமைக்கப்பட்டு யாகம் அபிஷேகத்துடன் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது .

சமாதி அடைந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் சித்தருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி ஆகியோரின் சிலைகள் ஏற்கனவே காரைதீவில் உள்ளன.

அந்த வரிசையில் குடைச்சாமி சித்தரின் உரவச்சிலை காரைதீவில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பிரதிஷ்டை செய்த இருதினங்களிலும் சமூக செயற்பாட்டாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அவர்களின் அன்னதானம் இடம்பெற்றது.

**காரைதீவு குறூப் நிருபர்**

# மூதூர் இறால்குழி பனம்பொருள் உற்பத்தி சங்கத்துக்கு உதவி கூட்டுறவு ஆணையாளர் வழங்கிய அங்கீகாரம்

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட இறால்குழி கிராம பனம்பொருள் உற்பத்தி விற்பனை அபிவிருத்திச் சங்கத்திற்கு மிக நீண்ட காலத்தின் பின்னர் திருகோணமலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலாதேவி உதயராஜா மூலமாக அங்கீகாரக் கடிதம் கிடைக்கப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

பல வருட காலமாக இக்கிராமத்தில் வாழும் மக்கள் மரக்கறித் தோட்டச் செய்கை, கால்நடை வளர்ப்பு, விவசாயம், நன்னீர் மீன்பிடி என்பவற்றுடன் கிராமத்தில் வளமாக காணப்படும் பனை மூலமும் வருமான வாழ்வாதார வழிக்கான தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் பனை மூலமாக பெறப்படும் பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல்மா, பழச்சாறு மற்றும் ஓலை மூலம் பயன்படுத்தக் கூடிய பல்வேறு பொருட்களையும் மக்கள் ஆர்வத்துடன் செய்து வருகின்றனர்.



பனை மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தேசிய ரீதியில் சந்தைப்படுத்துவதற்கும், வளமான பல பணிகளை மேற்கொள்வதற்கும் சங்கத்தின் நிருவாகிகளின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக உள்ளன.

இதனை கருத்திற் கொண்டு சங்கப் பதிவுக்கான முழுமையான அங்கீகாரக் கடிதம் கடந்த 09.09.2022 இல் திருமலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலாதேவி உதயராஜாவினால் வழங்கப்பட்டுள்ளது.

இறால்குழி பனம்பொருள் உற்பத்தி விற்பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஆர்.டி.தர்மரத்தினம், செயலாளர் எஸ்.எம்.ஜமால்தீன் உள்ளிட்ட நிருவாகிகள் திருமலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அங்கீகாரக் கடிதம் பெறும் நிகழ்வில் பங்கேற்ற போது ஆணையாளரினால் பயன்மிக்க வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மூதூர் பிரதேசத்தில் இவ்வாறான பனை வளங்களைப் பயன்படுத்தி குடும்ப வாழ்வாதார முன்னேற்றத்தை வளப்படுத்தவும், போதுமான மேலதிக உதவிகளை பல்வேறு வழிகளிலும் பெற்று உற்பத்தியின் சந்தை வாய்ப்பை அதிகரிப்பதற்கும் ஆலோசனைகள் கூறப்பட்டன.

தொழில் உபகரணங்கள், உதவிகள் தேவைப்படுவதால் இதற்கான உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி உதவுவதன் மூலமும் இதனோடு மேலதிக பயிற்சிகளை வழங்குவதன் மூலமும் இறால்குழி பனம்பொருள் உற்பத்தி விற்பனை அபிவிருத்தி சங்கம் வளர்ச்சிபெறும் என்பதில் ஐயமில்லை.

**எஸ். கஸ்ஸாலி...**
*(மூதூர் தினகரன் நிருபர்)*

# அக்கரைப்பற்று மாணவரிடம் சாரணியம் வேரூன்ற பாடுபடும் ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர் ஹாசீம்

கிழக்கு மாகாணத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் சாரணியத்தின் மூலம் தனது ஆளுமையை வளர்த்துக் கொண்டு, அதன் மூலம் தனது அடையாளத்தை இப்பிரதேசத்திற்கும் இலங்கை நாட்டுக்கும் வெளிக்காட்டியவர் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளரும், அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணிய சங்கத் தலைவருமான யூ.எல்.எம்.ஹாசீம் ஆவார்.

இவர் வலயக்கல்வி பணிப்பாளராக பணியாற்றியதுடன், தன்னுடைய பாடசாலைக்காலம் முதலே சாரணியத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.ஆசிரியராகவும் பணியாற்றி சாரணியத்துக்கு இவர் செய்த சேவைகள் அளப்பரியன.

இவர், கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் இப்பிரதேசத்திலுள்ள பல மாணவர்களுக்கு சாரணியத்தில் நற்பெயர் கிடைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அது மாத்திரமன்றி மாணவர்கள் சாரணியத்தின் மூலமாக வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சாரணர்கள் ஒன்றாக சந்திக்கும் சாரணர் ஜம்பொறிகளிலும் பங்கேற்க வழியமைத்துக் கொடுத்துள்ளார்.





இவர், தனது ஓய்வு காலத்திலும் கூட தனது சொந்த வேலைகளை புறம்தள்ளி வைத்து சாரணியத்தை இப்பிரதேசம் முழுவதும் வளர்த்துவிட வேண்டும் என முழுமூச்சாக செயற்படுகிறார். தற்போது அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணிய சங்க தலைவராக செயற்பட்டுவருகின்றார். இவருக்கு பக்கபலமாக இளவயதுடைய ஜனாதிபதி பதக்கங்கள் பெற்ற சாரணிய மாணவத் தலைவர்கள் இவரோடு இணைந்த செயற்பகின்றார்கள்.

2023ஆம் ஆண்டு கொரியா நாட்டில் நடைபெறவிருக்கும் 25ஆவது உலக சாரணியர் ஜம்போறியில் கலந்து கொள்ள அக்கரைப்பற்றிலிருந்து செல்லும் சாராணியர் எம்.ஐ.இபாம் இவருடைய ஆலோசனை மற்றும் வழிகாட்டலைத்தான் பின்பற்றினார்.

பாடசாலை மாணவர்களுக்கு சாரணியத்தை ஒழுங்கான முறையில் கற்றுக் கொடுப்பதற்காக கடந்த ஓகஸ்ட் 26ஆம் திகதி அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) அக்கரைப்பற்று கல்முனை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் இம்மாவட்டத்தில் உள்ள சாரணிய ஆசிரியர்களுக்கு தமிழ் மொழி மூலமான கலைக்கூறு 02 சாரணர் பயிற்சி பாசறை இவரின் தலைமையில் நடைபெற்றது. அதற்காக அவர் பாராட்டப்பட்டார்.

சாரணியமும் சாரணிய சேவைகளும் அருகிவரும் இந்தக்காலத்தில் அதனை வளர்த்துவிட தன்னை அர்ப்பணித்து பாடுபட்டு வரும் சாரணிய சங்க மாவட்ட தலைவர் யூ.எல்.எம். ஹாஸீம் என்றுமே போற்றப்பட வேண்டியவர்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்...**
*(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)*

# இராணுவ பயிற்சி பாடசாலை தங்குமிட, தனிமைப்படுத்தல் தொகுதிக்கான முதல் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தி

**இலங்கை இராணுவத்தின் மாதுரு ஓயா பயிற்சிப் பாடசாலையில் நவீன வசதிகள் படைத்த தங்குமிட மற்றும் தனிமைப்படுத்தல் நிலையத்தின் முதற் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சிட்டிசன்ஸ் டெவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சியின் (CDB) 10 மில்லியன் ரூபா நிதி உதவியில் இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.**

கொவிட்19 தொற்றுப் பரவல் தடுப்பு நிலையத்தின் (NOCPCO) நாட்டில் கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் இந்தத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

2020ஆம் ஆண்டில் நாட்டில் தொற்றுப் பரவல் உச்சமடைந்திருந்த நிலையில் இந்தத் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்குவதற்கு கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில் CDB இனால் இந்த நிர்மாணப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் தனிமைப்படுத்தல் நிலையமாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தற்போது மாதுரு ஓயா பயிற்சிப் பாடசாலையின் மாணவர்களுக்கான தங்குமிட வசதியாக இது பயன்படுத்தப்படும். இந்தத் தொகுதியில் காணப்படும் வசதிகள் காரணமாக, அவசியமாயின் வடமத்திய மாகாணத்தில் தனிமைப்படுத்தல் நிலையமாக துரித கதியில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்டுள்ள முதல் தொகுதியில் 64 பேரை தங்க வைக்க முடியும். மொத்தத் தொகுதியும் அங்கவீனமானவர்களுக்கு பயன்படுத்த வசதியான முறையில் அமைந்துள்ளன. இந்தத் தொகுதியின் கீழ் மாடியை பயிற்சி நிலையத்தை கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் நஜீவ எதிரிசிங்க திறந்து வைத் தார்.

CDB இன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரியுமான தமித் தென்னகோன் கருத்துத் தெரிவிக்கையில், "தேசிய சொத்தாக இந்தத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் தேவை எழுந்தால், இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளது. இலங்கை மக்களின் நலனை மேம்படுத்துவதற்கான CDB இன் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது" என்றார்.





## CDB ரூபா 10 மில்லியன் நிதியுதவி

கட்டளைத் தளபதி பிரிகேடியர் எதிரிசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "காலப்போக்கில் இந்த கட்டடத்தின் நோக்கம் மாற்றம் பெற்ற போதிலும், இந்தத் தொகுதியின் நிர்மாணப் பணிகளுக்கு CDB இன் அர்ப்பணிப்பு உள்ளது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தொற்று நோய் உச்ச அளவில் பரவாத காலகட்டத்தில், இந்தத் தொகுதி இலங்கையின் எதிர்கால படைவீரர்களை பயிற்சிகளுக்காக வரவேற்கும் பகுதியாக அமைந்திருக்கும் என்பதுடன், தமது கற்கைகளை அவர்களுக்கு தொடர்வதற்கு உதவியாக அமைந்திருக்கும்" என்றார்.

இந்த வைபவத்தில் பங்கேற்றிருந்தவர்களில் இலங்கை இராணுவ பயிற்சிப் பாடசாலையின் பல்வேறு நிலைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கியிருந்தனர். இந்த நிகழ்வு நேரலையாக இணையவழியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

# கட்டாரில் மகளிருக்கான விளையாட்டுக் கழகம்

**கட்டார் வாழ் இலங்கைப் பெண்களின் விளையாட்டுத்திறனை மேம்படுத்தவும், அவர்களின் உடல் உளசார் விருத்திக்கு உதவுமுகமாகவும் நுஸைலா பதுர்தீனால் 'விமன் இன் ஸ்போர்ட்ஸ் கட்டார்' (Women in Sports Qatar) எனும் பெண்களுக்கான விளையாட்டுக் கழகமானது 'மீண்டும் எங்கள் வாழ்வில்' எனும் சுலோகத்துடன் டிசம்பர் 6, 2021 அன்று முப்பது பெண் அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.**




முதலில் பெண்களுக்கான பெட்மின்டன் பூப்பந்தாட்ட விளையாட்டுப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பயிலுனர்களை ஊக்குவிக்குமுகமாக முதலாவது உள்ளக பூப்பந்தாட்டப் போட்டி கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது.

இதில் கட்டாருக்கான இலங்கைத் தூதுவரின் பாரியார் டொக்டர் செஷூன் மொஹிதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதனையடுத்து கட்டார் விளையாட்டு தினத்தன்று பெண்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் சர்வதேச மகளிர் தினத்தன்று அதிகாரபூர்வமாக மின்னஞ்சல் முகவரி, முகநூல், புலனம் மற்றும் படவரி விபரங்கள் வெளியீடு என்பன இடம்பெற்றன.

இக்கழகமானது பெண்களின் விருப்பங்களைக் கருத்திற் கொண்டு நீச்சல் மற்றும் வலைப்பந்து விளையாட்டு பயிற்சிகளுக்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு அதிக பெண்களை கவனத்தை ஈர்த்து வருகின்றது.

இக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட 'EID Sports Meet 2022' பெருநாள் சிறப்பு விளையாட்டு நிகழ்வில் ஏராளமான பெண்கள் மற்றும் சிறுவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதுமட்டுமன்றி இவ்வமைப்பு இலங்கை மக்களுக்கான மருத்துவ தேவைக்கு உதவுமுகமாக ஒரு தொகை நிதியை கட்டாருக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீன் அவர்களிடம் கையளித்து தனது சமூக அக்கறையையும் பங்களிப்பையும் உணர்த்தியுள்ளது.

இம்மாத தொடக்கத்தில் ஏற்பாடு செய்திருந்த அங்கத்தவர்களுக்கான இலச்சினை பதித்த பிரத்தியேக ஆடை (ரிசேர்ட் ) மற்றும் அங்கத்தவர்களின் அறிமுகப்படல நிகழ்வு கட்டாரிலுள்ள ஈரானிய பாடசாலையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதில் பிரதம அதிதிகளாக கட்டாருக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீன் மற்றும் அவரது பாரியார் டொக்டர் செஷூன் மொஹிதீன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தலைமை தூதரக அதிகாரி அப்துல்லாஹ் இப்ராஹிம் நூர் அல் இமாதியும் பல்வேறு துறைசார்ந்த புத்திஜீவிகள் மற்றும் வல்லுனர்களும் கலந்து கொண்டனர்.









இவ்வமைப்பானது பூப்பந்தாட்ட மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளை எதிர்வரும் வாரங்களில் நடத்த திட்டமிட்டுள்ளது.

30 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் குறுகிய காலத்தில் தற்சமயம் 400 அங்கத்தவர்களை உள்ளடக்கி வளர்ச்சி அடைந்து வருகின்றது.

இதற்கு இலங்கைப் பெண்களின் விளையாட்டு ஆர்வமும் அவர்களின் ஆர்வத்தை புரிந்து விளையாட்டுக்களை ஒழுங்கமைத்துக் கொடுக்கும் ஒரு களமாக இக்கழகம் செயற்படுவதுமே காரணமாகும். அதுமட்டுமன்றி இது சிறப்பாக செயற்படுவதற்கு நிர்வாகக்குழு, அங்கத்தவர்கள், பங்களிப்பாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் வழங்கிவரும் ஒத்துழைப்பு அளப்பரியது என கழகத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த ஜீவிதா திருச்செல்வம் தெரிவித்தார்.

தகவல்: கலாபூஷணம்
**நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்...**

# முஸ்லிம் மக்களின் நலன்களுக்காக உழைத்தவர் அன்வர் இஸ்மாயில்

**நீர்ப்பாசனத்துறை முன்னாள் அமைச்சரான மர்ஹூம் எம்.ஐ. அன்வர் இஸ்மாலின் 15ஆவது நினைவு தினம் (14.09.2022) இன்றாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் குறுகிய காலத்தில் தனக்கென தனியானதொரு இடம்பிடித்துக் கொண்ட ஒரு இளம் தலைவராக முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி மர்ஹூம் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் திகழ்ந்தார். 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி அவர் மறைந்தார்.**

1967.07.16 ஆம் திகதி ஆசிரியரான எம்.எம். இஸ்மாயில், மர்ஹூமா எம்.எம். சுபைதா உம்மா தம்பதியருக்கு முதற்பிள்ளையாக சம்மாந்துறையில் அவர் பிறந்தார். 1972இல் சம்மாந்துறை தாறுல்உலூம் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், 1977இல் உயர்கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்திலும் பயின்று, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் கற்று 1993இல் சட்டத்தரணியாக வெளியேறினார்.

தனது மைத்துனரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் அவர்களின் பாசறையில் பயிற்சி பெற்ற அன்வர் இஸ்மாயில் 1985இல் இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமடைந்த காலகட்டத்திலே முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் முன்னின்று உழைத்த இயக்கமான பாமிஸின் கிளை நிறுவனமான 'மூஸா' என்ற அமைப்பினை சம்மாந்துறையில் நிறுவி முஸ்லிம்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தினார்.

சட்டபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டது முதல் 1988 இல் மு.கா தலைவர் அஷ்ரஃபோடு இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மிகத் தீவிர உறுப்பினராக தன்னை மாற்றிக் கொண்டார்.

1988இல் கிழக்கில் தமிழ், முஸ்லிம் கலவரங்களில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக பாடுபட்டார். 1990களில் எம்.எச்.எம். அஷ்ரப் பிரகடனப்படுத்திய 'கறுப்பு வெள்ளி' போராட்டத்தை அன்வர் இஸ்மாயில் மாணவர் சுயாதீன அமைப்பின் ஊடாக வெற்றிகரமாக முன்னெடுத்தார்.

நிறைந்த பேச்சாற்றல், வசீகரம், தைரியம், மக்களின் மனதினை ஆளுதல், அறிதல், சந்தர்ப்பத்தினை நன்றாக சரிவரப் பயன்படுத்தல், அரசியலில் மேலிடத்தில் சாதிக்கக் கூடிய மதிநுட்பம், பரந்த அரசியல் அனுபவம், விரைவில் புரிந்து கொள்ளும் ஆற்றல், சரியான நேரத்தில் சரியான முடிவு, புன்சிரிப்பு போன்ற குணங்களினால் தனக்கென்று ஆதரவாளர்களை வசீகரித்தார்.

அஷ்ரஃபின் அரசியல் பணியில் பாரியதொரு பகுதியை தனது தலையில் சுமந்து கொண்டு சம்மாந்துறையின் உத்தியோகப்பற்றற்ற பாராளுமன்ற உறுப்பினராகவே அக்காலங்களில் அவர் செயற்பட்டார்.

2000ஆம் ஆண்டு அஷ்ரஃப் மறைவின் பின்னர் 2001 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## 15ஆவது நினைவுதினம் இன்று

கிழக்கு மாகாண உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற அவர் பின்னர் தேசிய பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2005இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக உழைத்தார். அந்த அரசாங்கத்தின் நீர்ப்பாசன அமைச்சராகக் கடமையாற்றினார்.



பல நீர்ப்பாசனத் திட்டங்களை தொடக்கி வைத்தார். மர்ஹூம் அஷ்ரஃபின் மறைவுக்குப் பின்னர் அவரின் கனவை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயற்பட்டு தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தினார். அரச அரச சார்பற்ற நிறுவனங்களினதும், வெளிநாட்டு தூதுவர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்று அர்ப்பணிப்புடன் உழைத்தார். 'மக்கள் மணிமனை' அமைத்து இரவு பகலாக மக்களுக்கு சேவை செய்தார். சம்மாந்துறையின் பௌதிக அபிவிருத்தியில் இவரின் பங்களிப்பு அளப்பரியதாகும். தனது மக்களையும், மண்ணையும் நேசித்தார்.

40 ஆண்டுகள் வாழ்ந்த அன்வர் இஸ்மாயில் ஒரு சட்டத்தரணியாக, முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காக போராடும் பாராளுமன்ற உறுப்பினராக, பிரதியமைச்சராக, அமைச்சராக குறுகிய காலம் பணியாற்றினார். சம்மாந்துறை வரலாற்றில் மட்டுமன்றி முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றிலும் அவர் மறக்க முடியாத ஆளுமை.

**எம்.சி.அன்சார்...**
(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

# ஹப்புத்தளை வின்ரோஸ் கல்வியக திறன் வகுப்பறைத் திறப்பு விழா

**மலையகத்தில் 2007 ஆம் ஆண்டிலிருந்து இளைஞர்களை தொழிற் கல்விக்கு ஊக்குவிக்கவென வின்ரோஸ் கல்வியகம் அரசாங்கத்தின் மூன்றாம் நிலைக்கல்வி நிலையமாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. பலநூறு தொழிற்துறை பட்டதாரிகளையும், பயிற்றப்பட்ட தொழில் கல்வி நிறைவு செய்த இளைஞர்களையும் வின்ரோஸ் கல்வியகம் உருவாக்கியுள்ளது.**

இந்நிறுவனத்தின் சேவையினை அங்கீகரிக்கும் வகையில் ஸ்கந்தகுமார் அவர்களதும் அமெரிக்காவை சேர்ந்த ஷோன் நாதன் அவர்களினதும் முயற்சியுடன் ஐக்கிய இராச்சியத்தின் இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனர் கலாநிதி நித்தியானந்தன், அமெரிக்காவைச் சேர்ந்த ஹரிசந்திரன் மற்றும் ஒரு பானை நிறுவன நிதி உதவியுடன் திறன் வகுப்பறை ஒன்று இலவசமாக வின்ரோஸ் கல்வியகத்திற்கு வழங்கப்பட்டது.



இதன் ஆரம்ப விழாவானது அண்மையில் நடைபெற்றது. அமெரிக்காவை சேர்ந்த வைத்தியர் நாஜ் நாகேந்திரா திறந்து வைத்தார். ஹப்புத்தளை தேயிலைத் தோட்டப் பகுதியில் இயங்கிவரும் தொழிற்கல்வி நிலையத்திற்கான முதலாவது திறன் வகுப்பறையைப் பெற்றுக் கொள்வதில் பெருமிதம் அடைவதாக வின்ரோஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



இந்நிறுவனத்தை அடுத்த இலக்கிற்கு கொண்டு செல்வதற்காக டூ லீவ்ஸ் ட்ரஸ்ட் தொண்டு நிறுவன ஸ்தாபகர் மணிக் ஜெயக்குமார், அதன் தலைவர் ஞானசேகரன் ஆகியோரின் வழிக்காட்டலின் கீழ் விருந்தோம்பல் கற்கை நெறியினை ஆரம்பித்த இந்நிறுவனம் ஸ்கந்தகுமார் உதவியுடன் பல தகவல் தொழில்நுட்ப வசதிகளை பெற்று தகவல் தொழில் நுட்ப பாடநெறியினையும் கற்பித்து வருகின்றது.

## அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு...

முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை, அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்வது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் அரசாங்க சேவையை மிகவும் முறைப்படியும் பயன்மிக்கதாகவும் அதனை உயர்மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் பல்வேறு பிரிவுகளிலுமுள்ள ஊழியர்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்தகாலங்களில் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 60,000 பட்டதாரிகளை தேவைப்படும் இடங்களுக்கு ஈடுபடுத்தும் நடவடிக்கைகளை பிரதமர் தலைமையிலான மேற்படி குழு மூலம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்களின்... (03 ஆம் பக்கத் தொடர்).

சகல அமைச்சுக்களையும் கண்காணிக்க வேண்டியேற்படுவதால் வேலைப்பளு அதிகமாகவுள்ளது.

எனவே வேலைகளை இலகுவாக்குவதற்காக இராஜாங்க அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு பிரத்தியேகமாக நிதி ஒதுக்கப்படவில்லை.

பிரதான அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் கீழேயே இவற்றின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அத்தோடு இவற்றுக்கு செயலாளர்களும் நியமிக்கப்படப் போவதில்லை.

மாறாக குறிப்பிட்ட பிரதான அமைச்சின் மேலதிக செயலாளர்கள், இராஜாங்க அமைச்சுக்களுடன் இணைந்து செயற்படுவார்கள். அமைச்சுப்பதவிகள் எண்ணற்றளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது எனக் கூறி விமர்சனங்களை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் என சுமார் நூறு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றுடன் ஒப்பிடுகையில் தற்போது மிகக் குறைந்தளவிலான அமைச்சு பதவிகளே வழங்கப்பட்டுள்ளன என்றார்.

## சமையல் எரிவாயு... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் நிதி மோசடி எவ்வாறு இடம்பெறுமென லிட்றோ எரிவாயு நிறுவனம் கேள்வி எழுப்பியுள்ளதோடு, அவ்வாறான தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதெனவும் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அமைச்சர் டக்ளஸின்... (03 ஆம் பக்கத் தொடர்)

மதங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தும் வண்ணம் இந்த சுமுகமான நடவடிக்கைகளுக்கு எல்லா தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டுமென சர்வதேச இந்து மத பீடத்தின் செயளாலர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்து உள்ளார்.

## மூன்று தொலைபேசி...

அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, 0773 039 034 அல்லது 0112 368 175 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 0112 582 447 என்ற அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (கட்டுப்பாட்டு) தொலைபேசி அழைப்பின் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

புலம்பெயர் தொழிலாளர்கள் உத்தியோகபூர்வ வழிகளில் நாட்டுக்கு அனுப்பும் தொகையினடிப்படையில் மின்சார வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அண்மையில் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றிருந்தார்.

அதன்படி, கடந்த மே மாதம் 01ஆம் திகதி முதல் 2023 ஆம ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை அதிகாரப்பூர்வ வழிமுறைகள் மூலம் 3,000 அமெரிக்க டாலர்களுக்கு மேல் அனுப்பிய புலம்பெயர்ந்த தொழிலாளிக்கு, அனுப்பப்பட்ட தொகையை விட 50 சதவீதம் குறைவான (CIF) Cost, Insurance, and Freight மதிப்புள்ள மின்சார மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படும்.

இதற்கிடையில், 2022 மே மாதம் 01 ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 31ஆம் திகதி வரை 20,000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் பரிமாற்றம் செய்தவர்கள் மின்சார காரை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவர்.

இதன்படி, மின்சார கார், டபிள் கெப், வேன் அல்லது டிப்பர் ட்ரக் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

உரிய வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் இணையத்தளத்திலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை பூர்த்தி செய்து உரிய அனைத்து ஆவணங்களுடன் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ஜெனிவாவில் சீனா...

மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளை சீனா பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சமூக ஸ்திரத்தன்மையை பேணுவதற்கும், இறையாண்மை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கைக்கு பலமான ஆதரவு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கான சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி சென் சூ மேலும் தெரிவித்துள்ளார்.

## போராட்டங்களுக்கு விரைவில்...

தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு வசதிகள் இருக்கும்” என்று அவர் கூறியுள்ளார். .

போராட்டங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் திறமை மற்றும் ஆற்றல் மிக்கவர்கள். அவர்களின் திறன்களை மேலும் மேம்படுத்த இந்த புதிய மையம் உதவும். எனவே இந்த நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விரைவில் கையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவைச் சந்தித்த போராட்ட இளைஞர்கள் சிலர், தமது போராட்டங்களுக்கு மிதக்கும் சந்தைக்கு அருகில் இடம் ஒதுக்கும் நடவடிக்கையை வரவேற்றதாக அவர் கூறினார்.

## தேவையான அளவு Gas...

செலுத்தி கடன் சுமையிலிருந்து விடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியுடன் இணைந்து பொருத்தமான கேஸ் வழங்குனவர்களை இனங்கண்டு எரிவாயுவை இறக்குமதி செய்தமை மற்றும் சிறந்த முகாமைத்துவம் காரணமாக மக்களின் எரிவாயு வரிசைகளை இல்லாமல் செய்து மக்களுக்கு சேவை வழங்க முடிந்ததாகவும் முதித பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிக விலைக்கு முட்டை விற்ற...

விவகார அதிகார சபையின் தலைவர் ஷாந்த நிரிஎல்ல தெரிவித்துள்ளார்.

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்பவர்களை தேடி சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## சீனா, இந்தியா, ஜப்பானுடன் 'லெசார்ட்'...

நிறுவனம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவை பதில் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தில் தேவையான நிதி உதவியை பெற்றுக்கொள்வதற்கு நாட்டின் கடன் மறுசீரமைப்பு அவசியமானதாகும்.

நிதி ஆலோசகரான லெசார்ட் நிறுவனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அதிகாரிகள் கடந்த மே மாதத்தில் தீர்மானமொன்றை மேற்கொண்டனர். அத்துடன் சர்வதேச சட்ட ஆலோசனை நிறுவனமான 'க்ளிபர்ட் சான்ஸ்' நிறுவனமும் நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடன், 85 பில்லியன் டொலரிலிருந்து 100 பில்லியன் வரை அதிகரித்துள்ளதாக மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.

சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் 13 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவேண்டியுள்ளது. அதில் பெருமளவு கடனை சீனாவுக்கு வழங்கவேண்டியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விவசாய...

(03 ஆம் பக்கத் தொடர்)

4,500 மெற்றிக் தொன் எம்மோபி தேவை பற்றியும் கலந்துரையாடினார். விவசாயிகளுக்குரிய எரிபொருள் விடயத்தில் முன்னுரிமை வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

அமைச்சரை நேரடியாக களவிஜயத்தையும், விவசாய அமைப்புக்களுடனான நேரடி கலந்துரையாடலையும் மேற்கொள்ள மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருமாறும் இராஜாங்க அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இம் மாத இறுதியில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்வதாகவும் உறுதியளித்தார்.

## ஈஸ்டர் தாக்குதலில்...

தாக்கல் செய்யப்பட்டுள்ள 107 வழக்குகளையும் செல்லுபடியற்றதாக்குமாறும் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோர் மற்றும் நிரந்தர அங்கவீனர்களாக உள்ளவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாவும் காயங்களுக்குள்ளான நபர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாவும் சொத்துக்கள் சேதங்களுக்காக 5 மில்லியன் ரூபாவும் நட்டஈடாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த பொறுப்பை பாதிப்புக்குள்ளானவர்கள் தொடர்பான அலுவலகத்திடம் ஒப்படைக்குமாறு அமைச்சரவைப் பத்திரம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டதாகவும் சட்டமா அதிபர் இதன் போது தெரிவித்துள்ளார். இந்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2019 ஏப்ரல் 24ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த நட்ட ஈட்டை பெற்றுக் கொடுக்கும் வரை தற்காலிகமான கொடுப்பனவொன்றை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் முடியும் என சுட்டிக்காட்டியுள்ள சட்டமா அதிபர், முறைப்பாட்டாளர்கள் அந்த கொடுப்பனவை பெற்றுக் கொள்வது தொடர்பில் இதுவரை வேண்டுகோள் விடுக்கவில்லை என்றும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி மகேஷா டி சில்வா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் பதில் கோவைப் படுத்தல் இச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அரசியலமைப்பின் 35 /1 சரத்திற்கு இணங்க அவரை வழக்கிலிருந்து விடுவிக்க உத்தரவிடுமாறும் அந்த சட்டத்தரணிகள் மனு ஒன்றை தாக்கல் செய்து நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி சிறப்புரிமையின் கீழ் அந்த வழக்கிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்த போதும் மாவட்ட நீதிமன்றம் அந்த வேண்டுகோளை நிராகரித்து உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும் மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்த அந்த உத்தரவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சென்றுள்ள நிலையில் அங்கு மேன்முறையீடு விசாரணையில் உள்ளது.

## மக்களுக்கு தேவையான... (03 ஆம் பக்கத் தொடர்)

வேண்டுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த விசேட கலந்துரையாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தலைமையில் (12) அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந் நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம், தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். மருத்துவ வழங்கல் துறை, தேவையான தகவல்களை முறையாக புதுப்பித்து மக்களுக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி தொடர்ந்து வழங்குவதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டுமென்றும், அதற்காக மற்ற நிறுவனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்.

சர்வதேசக் கடன்கள் அல்லது மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகளை முறையாகப் பயன்படுத்துவதில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமெனவும், இவ்வாறான திட்டங்களில் மெதுவான நடவடிக்கைகள் பல பிரச்சினைகளை ஏற்படுத்துமெனவும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நோயாளருக்குத் தேவையான மருந்துகளை முன்னுரிமையுடன் அடையாளம் கண்டு அவற்றை முறையாக விநியோகிக்க விசேட வைத்திய சங்கங்களின் அனுசரணையைப் பெற்று, வைத்தியசாலை பணிப்பாளர்களினூடாக மருந்துகள் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்வதற்கும் மேலும் கவனம் செலுத்துமாறும் சுகாதார அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். புற்றுநோய் நோயாளிகளுக்கான மருந்துகள் மற்றும் அத்தகைய மருந்துகளை வழங்குவதற்கு முன்னுரிமையுடன் செயல்பட வேண்டும்.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதில் உள்ளூர் விநியோகஸ்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அதிக ஆர்வம் காட்டினாலும், தற்போதுள்ள சில தடைகளினால் அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதெனவும், எனவே இவ்வாறான நிலைமைகளில் அதிக கவனம் செலுத்தி வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தயார் செய்வதாகவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது, சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் சீதா அரம்பேபொல, சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, மேலதிக செயலாளர்கள், பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள் மற்று ம் சுகாதார அமைச்சுடன் இணைந்த பல நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## உணவுப் பாதுகாப்பு,...

முன்னெடுக்கப்படும். ஜனாதிபதியின் தலைமையில் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குச் சபை இயங்குகிறது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான தேசிய கூட்டுப் பொறிமுறை, ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் இயங்கும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு பிரதமரின் செயலாளரின் தலைமையில் இயங்கும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான ஒருங்கிணைந்த மாகாண பொறிமுறை, மாகாண ஆளுநர்கள் தலைமையில் இயங்கும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறை, மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் செயற்படும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கா பிரதேச கூட்டுப் பொறிமுறை பிரதேச செயலாளர்களின் தலைமையில் செயற்படுத்தப்படும்.

14,022 கிராம அலுவலர் பிரிவுகளிலும் தலா, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், குடும்ப நல செவிலியர், அருகில் உள்ள பாடசாலை அதிபர் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் இருவர் அடங்கலாக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

அதன் மூலம் கிராம அலுவலர்கள் பிரிவுகளில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, வறுமையை ஒழித்து, போஷாக்குக் குறைப்பாட்டை நிவர்த்தி செய்து, பிரதேசத்தின் உணவு பாதுகாப்பை உறுதி செய்து, அப்பகுதியில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், தேசிய உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொடவின் வழிகாட்டலின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

பிரதமர், ஜனாதிபதியின் செயலாளர் முதல் கிராம உத்தியோகத்தர் வரை உள்ளடங்கியுள்ள முழுமையான அரச துறையுடன், தனியார் துறையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழில் வல்லுனர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டின் மொத்த அரிசித் தேவையில் 3.6 மில்லியன் மெற்றிக் தொன்கள், வருடாந்த வெங்காயத் தேவையில் 50% மற்றும் உருளைக் கிழங்குத் தேவையில் 35% என்பவற்றை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் வருடாந்தம் தேவைப்படும் 2,50,000 மெற்றிக் தொன் தொன் சோயாவில் 20% வீத்தை, 2025 ஆம் ஆண்டளவில் உள்நாட்டில் உற்பத்தி செய்யவும், வற்றல் மிளகாய்த் தேவையில் 20% வீதத்தை உள்நாட்டில் உற்பத்தி செய்யவும் திட்டமிடக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்குள் குரக்கன், பயறு, கௌபி, எள்ளு மற்றும் நிலக்கடலை ஆகியவற்றின் முழுத் தேவையை உற்பத்தி செய்யவும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றுக்கான கால்நடைகளின் மேம்பாட்டுக்காக வருடாந்தம் தேவைப்படும் 6,50,000 மெற்றிக் தொன் சோளத்தில், 80% வீதத்தை இந்த ஆண்டுக்குள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில், இலங்கைக்கு அவசியமான மொத்த சோளத் தேவையை உள்நாட்டில் பயிரிடவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்போகத்தில் நெல் மற்றும் சோளம் ஆகியவற்றை உற்பத்தி செய்யத் தேவையான 2,30,000 மெற்றிக் தொன் இரசாயன உரத்தையும், 1,00,000 மெற்றிக் தொன்TSP மற்றும் 182,000 மெற்றிக் தொன் MOP, ஆகியவற்றை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய கடன் வசதிகளுடன் இறக்குமதி செய்வதற்கும், ஏனைய உணவு உற்பத்திக்குத் தேவையான உரத்தை தனியார் துறையினர் மூலம் இறக்குமதி செய்வதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய இரசாயன உரம் மற்றும் இயற்கை உரம் ஆகியவற்றை தட்டுப்பாடின்றி சந்தையில் கொள்வனவு செய்வதற்கு தேவையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், 50 கிலோ யூரியா உரத்தை தற்போது சந்தையிலுள்ள விலையைவிட குறைவாக பெற்றுக்கொடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு பெரும்போகத்தில் சிறந்த அறுவடையைப் பெறுவதற்குத் தேவையான இரசாயன மற்றும் இயற்கை உரங்கள், கிருமிநாசனிகள், விதைகள் ஆகியவற்றை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு சந்தையில் தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்வதற்கும் தற்போது நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

விவசாயம் மற்றும் கால்நடைத் துறை உற்பத்தி அளவை, 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உற்பத்தி அளவுக்குக் கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு தேவையான விதைகள், இரசாயனப் பொருட்கள், இரசாயன உரங்கள், கால்நடை தீவனம் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட விவசாயத்துக்கு அவசியமான அனைத்துப் பொருட்களும் போதுமானளவில் வழங்கப்படும்.

## தாமரைக் கோபுரம் நாளை...

ஆர்.எம்.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பின்னர் தாமரை கோபுரத்தை பார்வையிடுவதற்கு பொது மக்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

கட்டணங்களை செலுத்தி பெற்றுக் கொள்ளும் நுழைவுச் சீட்டு மூலம் சகல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட முடியும். பிரவேச அட்டைக்கான கட்டணங்கள் 500 மற்றும் 2000 ரூபாவாகும்.

500 ரூபாய் செலுத்துபவர்கள் குழுக்களாக அழைத்துச் செல்லப்படுவார்கள். 2000 ரூபாய் செலுத்துபவர்கள் தனியாக செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இவர்கள் வரிசையில் காத்திருந்து செல்ல வேண்டி ஏற்படாது. பார்வையிட வரும் வெளிநாட்டவர் ஒருவருக்கான நுழைவுச் சீட்டு 20 அமெரிக்க டொலர்களாகும். அடுத்த சில மாதங்களில் நுழைவுச் சீட்டுக்கு பதிலாக கியூ.ஆர். தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2000 ரூபாவை செலுத்துபவர்களுடன் வருகை தரும் 12 அல்லது 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு 500 ரூபாவும், 500 ரூபா செலுத்துபவர்களுடன் வரும் சிறுவர்களுக்கு 200 ரூபாவும் அறவிடப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கும் 200 ரூபா கட்டணம் அறவிடப்படும். தாமரை கோபுர வருகை தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினால் முன்னரே அறிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவர்களுக்காக பிரத்தியேக நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படும்.

தாமரை கோபுர செயற்பாடுகளை 3 கட்டங்களாக ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். முதற்கட்டமான உணவு பண்டிகை, இசை நிகழ்ச்சி உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாம் கட்டமாக கண்டுபிடிப்பு மையங்கள், தொழிநுட்ப வங்கிகள் உள்ளிட்டவற்றை எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். இறுதி கட்டமாக அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் சினிமா திரையரங்கு, சொகுசு உணவகங்கள், சாகச விளையாட்டுகளான ஸ்கை டைவிங் மற்றும் பங்கி ஜம்பிங் உள்ளிட்டவை ஆரம்பிக்கப்படும்.

கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இவ்வருடம் மார்ச் மாதம் திறைசேரியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அதன் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகிறது.

தாமரை கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி சீன நிறுவனம் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்து மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. சுமார் 113 மில்லியன் டொலர் செலவில் தாமரைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு சீன நிறுவனம் 88.65 டொலர் கடனுதவியை வழங்கியுள்ளது. சீனாவிடம் பெறப்பட்ட கடன் தவணை 2024 ஆம் ஆண்டிற்குள் செலுத்தி முடிக்கப்பட உள்ளது. அத்துடன் ஏற்கனவே கடனாகப் பெறப்பட்ட சுமார் 66 மில்லியன் டொலர்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளன.

இதுவரை 58 முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அதில் 22 பேர் ஒப்பந்தம் மேற்கொள்ள இணங்கியுள்ளனர். 38 பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுக்காக எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாமரை கோபுரத்திற்கு வரும் பொதுமக்களுக்காக தரை தளம், பிரபலமான உணவகங்கள், நினைவுப்பரிசு அங்காடிகள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு, பல முன்னணி வணிக வங்கிக் கிளைகளும் தரை தளத்தில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. முதல் தளம், அலுவலக வசதிகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் டிஜிட்டல் சினிமா அனுபவத்தைப் பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்றாவது தளத்திலுள்ள மாநாட்டு மண்டபம், ஒரே நேரத்தில் சுமார் 400 பேருக்கான இருக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திறந்த தளம் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய தொழில்நுட்பத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள இலங்கையில் உள்ள மிகவேகமாக இயங்கக்கூடிய மூன்று மின் தூக்கிகள் தாமரைக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. குறித்த மின் தூக்கிகள் மூலம் தரைதளத்திலிருந்து 29 ஆவது மாடிக்கு 49 செக்கன்களில் செல்ல முடியும்.

வார நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரையும், வார இறுதி நாட்களில் நண்பகல் 12 மணி முதல் இரவு 11 மணி வரையும் தாமரை கோபுரத்தை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படும். அதே போன்று வார நாட்களில் இரவு 8 மணிமுதல் 11 மணி வரையும், வார இறுதி நாட்களில் இரவு 7 மணி முதல் 11 மணி வரையும் மின் விளக்குகள் ஒளிரச் செய்யப்படும்.

தாமரை கோபுரத்தின் மேற்தளத்திலிருந்து தொலைக்காட்டி மூலம் மாலை 3 மணி முதல் 6 மணி வரை சீகிரியா குன்றையும், 3 மணி முதல் 7 மணி வரை சிவனொளி பாதமலையையும் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏனைய நாடுகளில் காணப்படுவதைப் போன்று வெகு விரைவில் தாமரை கோபுரமும் சிறந்த பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட தளமாக மிளிரும் என நம்புவதாக நிறுவனத்தின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

## நம்பகமான நடவடிக்கை...

51ஆவது அமர்வின் போது இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடலில் கலந்து கொண்ட ஐக்கிய நாடுகள் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளுக்கான ஜெனீவாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் இந்திராமணி பாண்டே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறும் கடந்த திங்களன்று வலியுறுத்தினார்.

“மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் ஐ.நா சாசனத்தின் கொள்கைகளின் படி வழிநடத்தப்படும் ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான மாநிலங்களின் பொறுப்பை இந்தியா எப்போதும் நம்புகிறது.

“இந்த விடயத்தில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான தமது அர்ப்பணிப்புகளில் இலங்கை அரசாங்கத்தினால் அளவிடக்கூடிய முன்னேற்றம் இன்மை குறித்து இந்திய பிரதிநிதிகள் கவலையுடன் குறிப்பிட்டுள்ளனர்.

“இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான இந்தியாவின் நிலையான பார்வை, இலங்கைத் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியத்தை உறுதி செய்யும் வகையில், ஐக்கிய இலங்கையின் கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதாகும்.

“இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடி கடனினால் இயங்கும் பொருளாதாரத்தின் வரம்புகளையும் அது வாழ்க்கைத் தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

“இலங்கை குடிமக்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதும் அவர்களின் அதிகாரமளிப்பை நோக்கிச் செயல்படுவதும் இலங்கையின் சிறந்த நலன்களாகும், இதற்காக அடிமட்டத்துக்கு அதிகாரப் பகிர்வு ஒரு முன்நிபந்தனையாகும். இது தொடர்பில், முன்கூட்டியே தேர்தல்களை நடத்துவதன் மூலம் மாகாண சபைகளை செயற்படுத்துவது இலங்கையின் அனைத்து பிரஜைகளும் வளமான எதிர்காலத்துக்கான அவர்களின் அபிலாஷைகளை அடைய உதவும். எனவே இது தொடர்பில் உடனடியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையை வலியுறுத்துகிறோம்” என இந்தியப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

## கெக்கிராவையில் இலவச இரத்ததான முகாம்

கெக்கிராவைப் பிரதேசத்தில் ஹோராப் பொள, பஹலகம ஆகிய பிரதேசங்களில் இலவச இரத்ததான முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

அல்பலாஹ் DX சமூக முன்னேற்றக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி இந்த இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

அ/ ஹோராப்பொள முஸ்லிம் வித்தியாலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பி. ப 3.00 மணி வரை இந்த முகாம் நடைபெறும்.

ஊர்மக்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு இரத்தத்தினை தானமாக வழங்குமாறு அல்பலாஹ் DX சமூக முன்னேற்றக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

# ஷியா பிரிவின் ஹஸாரா குடிகள் மீது தொடரும் தாக்குதல்கள்

## தடுக்க தலிபான்கள் தயங்குவதாக ஹியூமன் வொட்ச் குற்றச்சாட்டு



ஷியா முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்களை பாதுகாப்போம் என தலிபான் அமைப்பு பதவிக்கு வருவதற்கு முன்னர் உறுதியளித்திருந்த போதிலும் கடந்த ஒரு வருட காலத்தில் மட்டும் 13 தாக்குதல்களில் 700க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஷியாக்களான ஹஸாரா முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்த முடியாமல் ஆளும் தலிபான் அரசு திண்டாடுவதாகவும் ஹியூமன் ரைட் வொட்ச் ஆப்கான் அரசின் மீது கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஹஸாரா முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைக் கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தலிபான்கள் கூறினாலும் உண்மையில் அப்படி அல்ல என்று மனித உரிமைகள் அவதானிப்பு சபை தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஹஸாராவினரின் பாடசாலைகள் மற்றும் அவர்கள் கூடும் இடங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படுவதாகவும் இவற்றைத் தடுக்கும் முயற்சிகள் குறைவாகவே இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள் போதுமானதாக வழங்கப்படுவதில்லை என்றும் மனித உரிமை கண்காணிப்பு சபையின் ஆசிய பணிப்பாளர் ஜோன் ஷிப்டன் சுட்டிக்காட்டியுள்ளார். ஷியா பிரிவைச் சேர்ந்த ஹஸாரா பிரிவினரை இஸ்லாத்தின் எதிரிகளாகக் கருதி தலிபான்களும் வேறு சில அமைப்புகளும் நெடுங்காலமாகவே தாக்கி வருகின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெருந்தோட்ட அமைச்சு

### வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனம்

### போர்ட் டிராக்டருக்கு உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் - (PR-6437)

போர்ட் 6640 டிராக்டருக்கு உதிரிப்பாகங்களை வழங்குவதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணித்தியாலம் முதல் பி.ப. 15.00 மணித்தியாலம் வரையில் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் அவன்யூ, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு பற்றுச்சீட்டை இணைத்தனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. முத்திரைக் குறி பொறித்த விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''போர்ட் 6437 டிராக்டருக்கான உதிரிப்பாகங்கள்'' எனக் குறிப்பிட்டு 2022 ஒக்டோபர் 04ஆம் திகதி 1400 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் அவன்யூ, கொழும்பு 04 என்ற முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அல்லது கூரியர் சேவை மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
4. சகல விலைமனுக்களுடனும் 450,000.00 இல. ரூபா (நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம்) பெறுமதியான கேள்விகள் முடப்படும் நாள்முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அன்னளவான மதிப்பீட்டுக் கிரயம் 30 மில்லியன் இல. ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனத்தின் பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ. +94 11 2505558, கைப்பேசி + 94 071 410 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்போர்ன் அவன்யூ, கொழும்பு 04.**

# இராணுவ அட்டூழியங்களுக்கு எதிராக பலூச்சி மக்கள் போராட்டம்

## மாகாண அரசு கண்டுகொள்வதில்லை என விசனம்



பாகிஸ்தானின் பலூச்சிஸ்தான் மாகாணத்தில் இராணுவத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும் மக்கள் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பாக தமது எதிர்ப்பை மக்கள் பலூச்சி தலைநகரான குவேட்டாவில் ஆர்ப்பாட்டங்கள் ஊடாக வெளிப்படுத்தி வருகிறார்கள். எனினும் பலூச்சி மாகாண அரசு அப் போராட்டங்களை கண்டும் காணாததுபோல நடந்துகொள்வதாக ஆர்ப்பாட்டத் தரப்பு விசனம் தெரிவித்து வருகிறது.

பலூச்சி மக்களின் உரிமைப் போராட்டங்களை பாக். இராணுவம் நசுக்குவதில் ஈடுபட்டிருப்பதாகவும் அதன் ஒரு வடிவமாக பலர் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதோடு சமீபத்தில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்துக்கு மத்தியிலும் போராட்டங்களைத் தொடர்ந்ததாக பலூச்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. காணாமல் ஆக்கப்படுவோர் பாக். இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை முகாம்களில் வதைக்கப்படுவதாகக் கூறி கடந்த 37 தினங்களுக்கும் அதிகமாக தொடரும் மக்கள் போராட்டங்களையும் மாகாண அரசு காதில் வாங்குவதில்லை என்று பலூச்சி பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

### இலங்கை மூய்தாய் சங்கம் மற்றும் இலங்கை சர்.்.பின் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை மேற் கொள்வதற்காக, நியமிக்கப்பட்ட வாக்கெடுப்புக் குழுவை அறிமுகப்படுத்துதல் மற்றும் விஷேட மகா சபைக் கூட்டம்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு, 2022.07.13 அன்று திகதியிடப்பட்ட இலக்கம் 2236/6 என்ற வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மற்றும் 2022.05.26 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 2281/25 என்ற வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அதிகாரமளிக்கப்பெற்றுள்ள தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்களின் வாக்கெடுப்புக் குழுவை அறிமுகப்படுத்துதல் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்களிற்காக நடாத்தப்படும் விஷேட மகா சபைக்கூட்டம் 2022 செப்டம்பர் 28ஆம் திகதி

01. இலங்கை மூய்தாய் சங்கம் - மு.ப. 09.30
02. இலங்கை சர்.்.பின் சம்மேளனம் - நண்பகல் 12.00

இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 இலுள்ள விளையாட்டமைச்சின் 4ஆம் மாடியிலுள்ள டன்கன்வைட் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதற்காக இலங்கை மூய்தாய் சங்கத்தின் மற்றும் இலங்கை சர்/பின் சம்மேளனத்தின் சட்டங்களிற்கமைவாக, ஒருங்கிணைந்த விளையாட்டுக் கழகங்கள்/ நிறுவனங்கள்/ சங்கங்கள் இருப்பின், அவ் இணை நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியொருவர், மேற்படி பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தினம் மற்றும் நேரத்தில், தம் விளையாட்டுக் கழகத்தின் ஆளடையாளத்தை உறுதிப்பத்தக்கூடிய ஆவணங்களுடன் இவ் மகா சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்கமாறு தயவாக அறிவிக்கின்றேன்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்.**

## பெறுகை அறிவித்தல்

நிதி அமைச்சு

### அபிவிருத்தி லொத்தர் சபை

### சேமிப்பக அறைக்கு (Server Room) Precision Type Floor Standing 02 வளிச்சீராக்கி அலகுகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

**BID No: DLB/PRO/2022/17**

அபிவிருத்தி லொத்தர் சபையின் சேமிப்பக அறைக்கு Precision Type Floor Standing 02 வளிச்சீராக்கி அலகுகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பிப்பதற்காக ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் சிறு அளவிலான பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. 2022-09-14ஆம் திகதியிலிருந்து 2022-09-28ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 2,240.00 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவின் வழங்கலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம்.
04. விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.
06. விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம், முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "அபிவிருத்தி லொத்தர் சபையின் சேமிப்பக அறைக்கு Precision Type Floor Standing 02 வளிச்சீராக்கி அலகுகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் (**BID No: DLB/PRO/2022/17**)" எனக் குறிப்பிட்டு 2022-09-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பிந்தாத வகையில் கிடைக்கச் செய்தல் வேண்டும். இதற்கு பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
07. விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2022-09-29ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
08. அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம். www.dlb.lk

**தலைவர்,**
**சிறியளவிலான பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**www.dlb.lk**
**2022-09-14.**

திகதி 12.09.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4876
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,882,310.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 6 0 4 1 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,076,159.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 906
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,129,800.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 02 63 70 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 125,189,385.20

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 185
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,682,380.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 04 33 57 62
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,639,392.60

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1331
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,669,300.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 9 7 5 6 8 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,599,298.80

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3118
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,394,400.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 12 15 62 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,852,130.40

**கோடி 26+ Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1224
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,846,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 270,204,126.00
X 24 07 46 50 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022 — SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..............
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :..............
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :..............
வாக்களித்தவர் பெயர் :..............
முகவரி :..............
மொபைல் இல. :..............

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 17-09-2022 இல. 25



வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.

இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!

SLTMOBITEL



# கிழக்கின் குரல்

# திருக்கோணேசர் ஆலயப் பகுதிக்குள் புனிதத்தை பாதிக்கும் செயற்பாடுகள்

## அமைச்சர் டக்ளஸ் விரைவில் கள விஜயம்





**மத உணர்வுகளை பாதிக்கும் செயற்பாடுகளுக்கு அரசு அனுமதிக்க கூடாதென்றும் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து**

வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை. திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியில், ஆலயத்தின் புனிதத்தை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவதை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாதென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இப் பகுதியில்,ஆலயத்தின் புனிதத்தை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவதாகக் கேள்வியுற்ற அமைச்சர் இதுகுறித்து, அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவந்தார். எந்தவொரு மதத்தினரின் உணர்வுகளையும் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாதென, அவர் இதன்போது வலியுறுத்தினார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே பத்திரிகை செய்தி மூலம் அறிந்திருந்தாகவும், அதுதொடர்பாக நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந் நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மத விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சரும் இணைந்து திருகோணமலைக்கு களவிஜயம் மேற்கொள்ள உள்ளனர். அங்குள்ள நிலைமைகளை நேரடியாக ஆராயும் அமைச்சர்கள், ஆலய நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடுவர்.

இனிமேல், ஆலயப்பகுதியில் இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவும் அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு இலவசமாக இயற்கை பசளை

(கிண்ணியா தினகரன் நிருபர்)



அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில், இயற்கைப்பசளை (Organic) இலவசமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வு செவ்வாய்க்கிழமை (13) கிழக்கு மாகாண செயலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ். எம்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். முதலமைச்சில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இலவசமாக இயற்கை உரங்கள் இங்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதலமைச்சின் கணக்காளர் எம்.ஐ.எம்.முஸ்தபா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இயற்கை பசளையை வழங்கி வைத்தனர்.

# முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம்

(சவளக்கடை குறூப் நிருபர்)



சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு காலைஉணவு வழங்கும் திட்டம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நேற்று (12) திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கமைவாக, சாய்ந்தமருது "கிட்ஸ்வொய்ஸ்" முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம்.ஆஷிக் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி வை.திருப்பதி, என்.எம்.எஸ்.சிறீன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வி.நஸ்லா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இவ்வேலைத்திட்டம், முதற்கட்டமாக எட்டு முன்பள்ளிகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

(தோப்பூர் குறூப் நிருபர்)

சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவின்,செல்வநகர் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.சுமார் 105 குடும்பங்கள் இதற்கென தெரிவு செய்யப்பட்டு இந்த உலருணவுப் பொதிகள் கடந்த (12) மாலை செல்வநகர் பலநோக்கு கட்டடத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இக்குடும்பங்களுக்கு பதினாறாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

உலக தரிசனம் அமைப்பின் நிதி உதவியுடன் இவை, வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரிசி, மா, பருப்பு, கடலை, மீன்டின், சமபோச மற்றும் சோயா போன்ற உலருணவுகள் இப்பொதியில் வைக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னரும் இவ்வாறு, பல குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

# பொன்னாடை போர்த்தி கௌரவம்



(பாலமுனை தினகரன் நிருபர்)

தாதியர் துறையில் கலாநிதி பட்டம்பெற்ற பாலமுனை திராய்க்கேணியைச்சேர்ந்த கார்த்திகேசு காத்துஜெயனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை(11) நடைபெற்றது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், கழகத்தின் தலைவர் ஐ.எல்.பாயிஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. அட்டாளைச்சேனை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்ஸீல், உள வளத்துணை ஆலோசகர் எஸ்.ஆப்தீன், உட்பட கழக உறுப்பினர்கள் ஆகியோர் கார்த்திகேசு காத்துஜெயனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# கலைமன்றங்களை பதிதல், புதுப்பித்தலுக்கு விண்ணப்பம்

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலை மன்றங்களை 2023, 2024, 2025ம் வருடங்களுக்கு புதிதாக பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்சன் அறிவித்துள்ளார்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கடந்த 2017 காலப்பகுதியில் உருவாக்கிய 'கலை மன்றங்களை பதிவு செய்வதற்கான விதிமுறைகளுக்கு உட்பட்ட வகையில்

விண்ணப்பங்கள் இருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் இம்மாதம் (30) முன்னர் அந்தந்த பிரதேச செயலக காலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புற்றுநோய் பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு வைத்தியசாலையில்

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

புற்றுநோயின் தன்மைகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுவரை காலமும் இவ்வசதிகள் இங்கு இல்லாதிருந்ததால், கிழக்கு மாகாண மக்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையை நாட வேண்டிய நிலைமைகள் இருந்தன.

கிழக்கு மாகாணத்தில் நோயாளர்கள் இதுவரைகாலமும் சிகிச்சை பெறுவதற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த போதிலும், நோயின் தன்மை பற்றிய பரிசோதனைகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்றன. இந்த பரிசோதனையின் முடிவுகள் கிடைப்பதற்கு சுமார் ஒன்றரை மாதகாலம் தேவைப்பட்டது. இந்த கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இலங்கை புற்றுநோய் சங்கத்தி மட்டக்களப்பு கிளையின் ஆதரவுடன், வைத்திய பரிசோதனைகள் மட்டக்களப்பில் மேற்கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பரிசோதனைக்கு தேவையான,சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை, இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் உறுப்பினர்கள் நேற்று மட்டு போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்தனர். இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி கருணாகரன் தலைமையிலான உறுப்பினர்கள் இந்த மருந்து பொருட்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்களான டாக்டர் மைதிலி பாத்லட், டாக்டர் எப். மதன் மற்றும். வைத்தியசாலை அதிகாரிகள் குழுவினரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில், புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் செயலாளர் டாக்டர். என். மயூரேசன் பொருளாளர் எஸ். முத்துலிங்கம், உபதலைவர் எந்திரி. எம் ரஞ்சன்,போதனா வைத்தியசாலையில் பிரதம கணக்காளர் எஸ். டேவிட் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். மருந்துப்பொருட்கள் யாவும் இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்புக்கிளை உறுப்பினர்களின் நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்டது.

# மட்டக்களப்பு மாநகரசபையில் மகாராணிக்கு இறுதி அஞ்சலி

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாநகரசபையின் 64வது சபைஅமர்வு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது. இவ்வமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர பிரதி ஆணையாளர் உ.சிவராசா, மாநகர சபையின் பொறியியலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். வழமையான சபைச்சம்பிரதாயங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமர்வில், நிலையியற் குழுக்களின் சிபாரிசுகள், முதல்வரின் முன்மொழிவுகள், உறுப்பினர்களின் முன்மொழிவுகள் போன்றன இடம்பெற்றன.

நாட்டில் நிலவும் பொருளாதாரப்பிரச்சனை மற்றும் காகிதாதிப் பிரச்சனை உள்ளிட்டவற்றால் சபை கூட்டறிக்கையை மின்னிதழ் ஊடாக வழங்கும் சுற்றுநிருபம் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.இதில், விசேடமாக பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், 2021 மற்றும் 2022ம் ஆண்டுகளுக்கான பாதீட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு இதன்போது மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்களின் பாவனைக்காக குடிநீர் வசதி



(பாசிக்குடா நிருபர்)

ஓட்டமாவடி கட்டுமுறிவு வீதிக்கு அருகாமையில் பொதுமக்களின் பாவனைக்காக குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.குவைத் அல்நூநர் நிறுவனத்தின் நிதியுதவியில்,கோறளைப்பற்று மேற்கு பிரதேசபை இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.எம். நௌபர் குறித்த அமைப்பிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஓட்டமாவடி பாலத்திற்கு அருகிலுள்ள களப்பை அண்மித்த பிரதேசம் குப்பைகள் மற்றும் கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டு அசுத்தப்படுத்தப்பட்டிருந்தது.இந்நிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக இப்பகுதியில் மரங்கள் நடும் திட்டத்தை தவிசாளர் முன்னெடுத்திருந்தார். தற்போது அழகுபடுத்தப்பட்டுள்ள இச்சூழலில்

குடிநீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இச்செயல் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குவைத் அல்நூர் நிறுவனத்துக்கு கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை தவிசாளர் நன்றி தெரிவித்துள்ளார்.

# காத்தான்குடியில், பெண்களுக்காக உளநல, சுய கற்றல் நிலையங்கள் திறந்து வைப்பு



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



காத்தான்குடியிலுள்ள பெண்களின் நீண்ட காலத் தேவையாக இருந்த உளநல ஆற்றுப்படுத்தல் நிலையமும் சுய கற்றல் மையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக ஐவெயார் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா பிர்தௌஸ் தெரிவித்தார்.

நியுஸிலாந்து உயர் ஸ்தானிகராலயத்தின் நிதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்நிலையம் செவ்வாய்க்கிழமை (13) வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நியூஸிலாந்து உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு மற்றும் இடம்பெயர்வுக்கான அதிகாரி ப்ரெட் ஷீல்ட்ஸ்,காத்தான்குடி பிரதேச செயலாளர் எம். உதயஸ்ரீதர், காத்தான்குடி ஆதார வைத்தியாசலையின் வைத்திய அத்தியட்சகர் எம். எஸ்.எம். ஜாபிர் உட்பட சமூக நல அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண் செயற்பாட்டாளர்கள், ஐவெயார் நிறுவனத்தின் அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய ஐவெயார் நிறுனத்தின் பணிப்பாளர் அனீஸா, காத்தான்குடியில் உளநல ஆற்றுப்படுத்தல் நிலையம் மட்டுமல்ல பெண்களுக்காக ஆற்றப்பட வேண்டிய பல சேவைகள் காத்துக் கிடக்கின்றன. காத்தான்குடியிலுள்ள ஒட்டு மொத்த சனத்தொகையில் 52 வீதமானோர் பெண்களாக உள்ளனர். இப்பிரதேசத்தில் பல்வேறு வகைப் பாதிப்பிற்குள்ளான பெண்களுக்காக ஒரு காப்பகம் தேவை. பெண்கள் உடற்பயிற்சி செய்வதற்கான பாதுகாப்புடன் கூடிய அமைவிடம், பெண்களுக்கான விழிப்புணர்வூட்டல், அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்தும் நிலையங்கள், ஆரோக்கிய நிலையங்கள், போன்றவற்றின் தேவைப்பாடுகள் உள்ளன.

எதிர்காலத்தில் இவைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். பெண்களின் உடல், உள ஆரோக்கியத்தை வலுப்படுத்துவதற்கும் இவை உதவும் என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய பிரதம அதிதி, ப்ரெட் ஷீல்ட்ஸ் ஐந்து மில்லியன் மாத்திரமே சனத்தொகையைக் கொண்ட நியூஸிலாந்து,இலங்கையைப்போல் இரு மடங்கு பரப்பளவைக் கொண்டது. அங்கு இலங்கையர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். ஏற்கனவே எமது நியூஸிலாந்தில் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் வசிக்கின்றார்கள். இன்றைய நிகழ்வில் பங்கேற்ற இளம் பெண்களில் பலரை எதிர்காலத்தில் நியூஸிலாந்தில் சந்திப்பதிலும் நாம் மகிழ்ச்சியடைவோம்" என்றார்.






# வீதி அபிவிருத்தி பணி ஊழியர்கள் தங்கியிருந்த விடுதி தீக்கிரை



__வவுனியா விசேட நிருபர்__

வவுனியா மன்னார் வீதி 4ஆம் கட்டை பகுதியில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபடும் ஊழியர்கள் தங்கியிருந்த விடுதியில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக விடுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

மாவட்டத்தின் பல பகுதிகளில் மெகா (Mega) நிறுவனத்தினரால் ஒப்பந்தம் அடிப்படையில் வீதி அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் பணியா ற்றும் ஊழியர்கள் தங்கியிருக்கும் விடுதியிலேயே நேற்றுமுன்தினம் (12.09) தீப்பரவல் ஏற்பட்டது.

அதனை அவதானித்த மக்கள், வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினருக்கு அறிவித்திருந்தனர். இதனை தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்த உரிய தரப்பினரின் முயற்சியினால் விடுதியில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. தீப்பரவல் காரணமாக விடுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் தீ விபத்துக்கான காரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் விடுதியில் 30 ஊழியர்கள் தங்கியிருப்பதுடன் அவர்கள் விடுமுறையில் சென்றுள்ளமையினால் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை. பல உடமைகள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன.

# புளியங்குளம் விபத்தில் ஒருவர் மரணம்

__ஓமந்தை விஷேட நிருபர்__

வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்றையதினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பஞ்சநாதன் குகேந்திரன் (வயது49) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

வவுனியா நகர் பகுதியிலிருந்து யாழ் நோக்கி புளியங்குளம் பாடசாலைக்கு முன்பாக சென்று கொண்டிருந்த ஹைஹேஸ் ரக வாகனம் எதிரே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெருந்தோட்ட அமைச்சு

### வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனம்

### 2022ஆம் வருடத்தில் டிராக்டரில் இணைக்கப்பட்ட கரும்பு ஏற்றிகளை (Tractor Mounted Cane Loaders) வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

செவனகல பிரிவிற்கு 2022ஆம் வருடத்தில் 04 எண்ணிக்கையான டிராக்டரில் இணைக்கப்பட்ட கரும்பு ஏற்றிகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

1. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணித்தியாலம் முதல் பி.ப. 15.00 மணித்தியாலம் வரையில் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் அவன்யூ, கொழும்பு - 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

| தொ. இல. | உருப்படி | தேவையான எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்பு ரூபா | விலைக் கோரல் பிணை முறி ரூபா | குறிப்பு இல. |
|---|---|---|---|---|---|
| 01 | டிராக்டரில் இணைக்கப்பட்ட கரும்பு ஏற்றிகள் | 04 | 12,500.00 | 480,000.00 | 6305 |

2. விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு பற்றுச்சீட்டை இணைத்தனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. முத்திரைக்குறி பொறித்த விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்தில் 04 எண்ணிக்கையான டிராக்டரில் இணைக்கப்பட்ட கரும்பு ஏற்றிகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டு 2022 ஒக்டோபர் 04ஆம் திகதி 1400 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் அவன்யூ, கொழும்பு - 04 என்ற முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அல்லது கூரியர் சேவை மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். அதன்பின் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
4. சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்வி மூடும் நாள்முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனத்தின் பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ. +94 11 2505558, கைப்பேசி + 94 071 410 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்போர்ன் அவன்யூ, கொழும்பு - 04.**


# சந்தேகத்திற்கிடமாக கைப்பையுடன் நடமாடிய இளைஞன் கைது

ஹெரோயின், தங்கநகைகள் மீட்பு



__யாழ்ப்பாணம் குறூப் நிருபர்__

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு கைப்பையுடன் சந்தேகத்திற்கிடமாக நடமாடியவரிடமிருந்து சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளும், ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பெண்கள் பாவிக்கும் கைப்பையுடன் (ஹேண்ட்பேக்) சந்தேகத்திற்கிடமான முறையில் இளைஞனொருவன் அப்பகுதியில் நடமாடியுள்ளார்.

தகவல் அறிந்த யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சம்பவ இடத்திற்கு சென்று, சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்து, அவரது உடமைகளை சோதனையிட்டனர். சந்தேகநபர் 24 வயதுடைய குருநகர் பகுதியை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. இளைஞனின் கைப்பையினுள் சுமார் 08 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியான தங்க நகை என்பன காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தண்டவாளத்தில் சடலம் மீட்பு

__வவுனியா விசேட நிருபர்__

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ரயில் தண்டவாளத்திற்கு அருகில் ஆணொருவரின் சடலம் நேற்று (13.09) காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 45 வயது மதிக்கத்தக்க நபர் என தெரியவந்துள்ளது.

நேற்று காலை தாண்டிக்குளம் பகுதியில் தண்டவாளத்தில் சடலம் ஒன்று காணப்படுவதை அவதானித்த பிரதேசவாசிகள் இதுதொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு ரயிலில் மோதுண்டு இரு கால்களும் துண்டிக்கப்பட்டமையால், கடும் குருதிப்பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.


NSB

## தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/ITE/2022/20**

இங்கு காட்டப்பட்டுள்ள கேள்விக்கு இயைபான பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | தேசிய சேமிப்பு வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு 18 எண்ணிக்கையான வலையமைப்பு சுவிட்சுகளை (Network Switches) வழங்குதல், நிறுவுதல் மற்றும் பிரதியீடு செய்தல் |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 8,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 280,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2022-10-04 பி.ப. 3.00 மணி |
| **கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022-10-05 மு.ப. 10.00 மணி |
| **கேள்வி முன்னோடிக் கூட்டம்** | 2022-09-20 மு.ப. 10.30 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.

2. 2022-09-14ஆம் திகதியிலிருந்து 2022-10-04ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, (வழங்கல்கள்) முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் கேள்வி திறக்கப்படும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (வழங்கல்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**


# வேகக் கட்டுப்பாட்டை இழந்து கப் ரக வாகனம் விபத்து

__ஓமந்தை விஷேட நிருபர்__

வவுனியா காமினி பாடசாலைக்கு முன்பாக ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (12) மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பூங்கா வீதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி செல்ல முற்பட்ட பிக்கப் ரக வாகனம் ஒன்று வவுனியா நகரிலிருந்து குருமன்காட்டு பகுதி நோக்கி மன்னார் பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த, மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த செட்டிகுளம் வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் வீதியில் பயணித்து கொண்டிருந்த நிர்வாக உத்தியோகத்தர் மீது வவுனியா காமினி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம் மோதியமையால் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து முப்பது மீற்றர் தூரத்திற்கு மோட்டார் சைக்கிள் இழுத்து செல்லப்பட்டதுடன் விபத்தில் சிக்கிய உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


**இலங்கை அபிமன்**

**(தேசிய இலக்கிய பெருவிழா - 2022)**

## ஏற்பாட்டு நடவடிக்கைகளிற்காக விழா முகாமைத்துவ நிறுவனங்களிடமிருந்து ஆலோசனைகளை கோரல்

**RFP இலக்கம் 01**

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரினால் 2022 இலக்கிய பெருவிழாவிற்காக விழா முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாக அனுபவமுள்ள நிறுவனங்கள் அல்லது நபர்களிடுமிருந்து இரு உறை முறைமையின் கீழ் முத்திரையிடப்பட்ட ஆலோசனைகள் (RFP) 2022 செப்டம்பர் 29 வரை கோரப்படுகின்றன.

02. தேசிய இலக்கியப் பெருவிழா, 2022 ஒக்டோபர் 27,28,29 மற்றும் 30 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

03. இவ் விழாவில் அரச மற்றும் இணை நிறுவனங்களின் காட்சிக்கூடங்கள், வர்த்தக கூடங்கள், பல்வகை கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

04. 2022 செப்டம்பர் 15 முதல் 2022 செப்டம்பர் 29 வரை எந்தவொரு வார வேலை நாளிலும் மு.ப.09.00 முதல் பி.ப.03.00 வரை எழுத்துருவ விண்ணப்பக்கடிதமொன்றை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூபா 3000.00 இற்கான தொகையை செலுத்தி இவ் அமைச்சின் பெறுகைப்பிரிவில் இதற்கான ஆவணங்களை (RFP) பெற்றுக்கொள்ளலாம்.

05. 2022 செப்டம்பர் 20 அன்று மு.ப.10.00 இற்கு இவ் அமைச்சின் பெறுகைப்பிரிவில் இதற்கான விலைமனு முன்னோடி சந்திப்பு ஒன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

06. இரு உறை முறைமையின் கீழ், முத்திரையிடப்பட்ட ஆலோசனைகள் அடங்கிய ஆவணங்கள், 2022.09.29 அன்று மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர், "கணக்காளர் (பெறுகை) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 08ஆம் மாடி, செத்சிரிபாய, (முதலாம் படிநிலை) பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரில் ஒப்படைக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் ஆலோசனை ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

07. இது தொடர்பான மேலதிக விபரங்களை பணிப்பாளர் கலாநிதி பிரசாத் ரணசிங்ஹவின் இலக்கம் 071-5352717 என்ற தொலைபேசி மூலம் அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**08 ஆம் மாடி, செத்சிரிபாய (முதலாம் படிநிலை)**
**பத்தரமுல்ல**

# நகர்வலம்



## வீடொன்றை உடைத்து தங்க நகைகள் கொள்ளை

### சந்தேக நபர்கள் 04 பேர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

வீடொன்றினை உடைத்து தங்க நகைகளை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெக்கிராவ பொலிஸ் பிரிவிலுள்ள திப்பட்டுவெவ பகுதியிலுள்ள வீடொன்றினை உடைத்து அங்கிருந்த தங்க நகைகளை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளர் செய்திருந்த முறைப்பாட்டினை அடுத்து விசாரணைகளில் ஈடுபட்டு வந்த குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த திங்கட்கிழமை (12) பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் சில தங்க நகை கொழும்பு பகுதியிலுள்ள நபர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் 43,39,29,32 வயதுடைய தம்புள்ள மற்றும் கெக்கிராவ பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட போதைப் பொருள் பாவனைக்கு அதிகளவில் அடிமைப்பட்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தங்க சங்கிலியொன்றையும் பென்டன் ஒன்றையும் மோதிரம் ஒன்றையுமே கொள்ளையர்கள் கொள்ளையடித்துள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது.

விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் இன்றைய அரசு கூடுதல் கரிசனை

### அநுராதபுரத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய அரசு கூடிய கவனம் எடுத்து வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அநுராதபுரத்தில் விவசாயிகளுடன் நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்தும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கியமான நபரொருவருடைய முட்டுக்கட்டை காரணமாகவே விவசாயிகளுடைய பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இன்னும் இரண்டு தினங்களில் விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் அந்த நபருடைய பெயரை நான் வெளிப்படுத்துவேன்.

நாட்டின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் நோக்கில் விவசாயத்துறையினை முன்னேற்றுவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். விவசாயிகளுக்கு தேவையான சகல இரசாயன பசளைகளையும் தடையின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## தாய்ப்பால் புரையேறி குழந்தை உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தாய்ப்பால் புரையேறி ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்துள்ளதாக ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவப்பொத்தானை 77வது மைல்கல் மொரகேவ பகுதியைச் சேர்ந்த குழந்தையே நேற்று முன்தினம் (12) இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குழந்தை தாயிடம் பால் அருந்திக்கொண்டிருக்கும் போது தாய்ப்பால் புரையேறி உள்ளதுடன் அதே நேரத்தில் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இருந்த போதும் அந்த நேரத்தில் குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

## நூல் வெளியீட்டு விழா இன்று கொழும்பில்



சிரேஷ்ட பட்டய கணக்காளர் ஆர். ஏ.ஜயவீர எழுதிய 'பொரதியன் பேதியட்ட' (கலங்கின நீரில் தெளிந்த நீருக்கு) நூல் வெளியீட்டு விழா இன்று 2.00 மணியிலிருந்து 6.00 மணிவரை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நூல் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கான வழியை காட்டும் நூலாகும். இந்நூல் வெளியீட்டு விழாவில் புத்திஜீவிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்வர்.



கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ தேர் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆதீனகர்த்தா திருமதி. மகேஸ்வரி சிறிதரன் தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். படம்: எம்.நசார்

## தேசாபிமானி பட்டம் வழங்கி கௌரவிப்பு



பேருவளை, மஹகொடையை வசிப்பிடமாகக் கொண்ட சமூக சேவையாளரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய மொஹமட் பதுர்தீன் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் தேசாபிமானி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சமாதானம், ஐக்கியம் கலாசார அபிவிருத்தி மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக இவர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இலங்கை சமாதான நீதவான்களின் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய சமாதான மாநாட்டில் இந்த அதியுயர் விருது வழங்கப்பட்டுள்ளது.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நீண்டகாலமாக பணிபுரிந்து வரும் இவர், தான் சார்ந்த சமூகத்திற்கு பல்வேறு பொது அமைப்புகளைக்கொண்டு சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எவோட்ஸ் –– 2022 சிறுகதைப் போட்டி

புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் 2022க்கான கலை, கலாசாரப் போட்டித்தொடரின் வரிசையில் சிறுகதைப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு,

1) சொந்தக் கருப்பொருளில் சிறுகதை எழுதப்படலாம்.

2) சிறுகதை ஏ.4 தாளில் 2 பக்கங்களுக்கு மாத்திரம்.

3) சிறுகதை பாமினி பொன்டில் டைப் செய்து அனுப்பப்படவேண்டும்.

4) பிரதியுடன் பெயர், முகவரி, தொடர்புக்கான தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

5 ஒருவர் ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்பவேண்டும். ஆக்கம் முன்னர் ஏதேனும் ஊடகங்களிலோ பதிவாக்கங்களிலோ இடம்பெற்றிருக்க கூடாது சிறுகதையை அனுப்பவேண்டிய இறுதித் திகதி 30.09.2022

6. அனுப்பவேண்டிய **puthiyaalaikalaivaddam@gmail.com** மற்றும் 075 4880172 என்ற இலக்கத்துடனான WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம். வயது எல்லை 45 வயதுக்கு கீழ் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள 076 2002701, 077 6274099 மற்றும் 077 7412604 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

## ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர் மகன் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பத்து இலட்சம் ரூபா பெறுமதிமிக்க ஹெரோயின் போதைப்பொருளுடன் ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர் ஒருவரின் புதல்வர் ஒருவரை கடந்த (10) கைது செய்துள்ளதாக அநுராதபுரம் கோட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

அநுராதபுரம் ஜயந்தி மாவத்தை பகுதியில் அமைந்துள்ள புகையிரத விடுதியில் வசித்து வரும் 26 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவர். கம்பஹா பகுதியில் இருந்து நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் விநியோகம் செய்து வரும் பிரசித்திபெற்ற போதைப்பொருள் விநியோகஸ்தரின் அநுராதபுரம் முகவராக சந்தேக நபர் செயல்பட்டு வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரின் தாய்க்கு கம்பஹா பகுதியில் வீடொன்று இருப்பதாகவும் அவர்கள் இருவரும் இடையிடையே அநுராதபுரம் புகையிரத விடுதி மற்றும் கம்பஹா வீட்டிலும் வசித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாடிக்கையாளர் ஒருவருக்கு வீதியின் அருகில் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைப்பதற்கு சென்ற போது அநுராதபுரம் 3 வது படி பகுதியில் வைத்து சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அந்த வேளையில் அவரிடம் இருந்து 25 கிராம் 930 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கைப்பற்றியதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

புத்தளம் மாவட்டத்தில்;

## தென்னை மரங்களுக்கு இலைக் கொட்டி நோய்

### விளைச்சல்கள் பாதித்துள்ளதாக செய்கையாளர்கள் கவலை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மாவட்டத்தில் உள்ள தென்னை மரங்கள் இலை கொட்டி நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் இருந்து அதிகளவு தேங்காய்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி நாட்டுக்கு கிடைக்கும் இந்த சந்தர்ப்பத்தில் முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல ஏக்கரிலுள்ள தென்னை மரங்கள் இலை கொட்டி நோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பொருளாதார நெருக்கடியுடன் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல காரணங்களினால் தாம் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலையில், தென்னை மரங்களுக்கு இவ்வாறு நோய் ஏற்பட்டமை தமக்கு மேலும் பொருளாதார ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெங்கு பயிர் செய்கையாளர்கள் கூறுகின்றனர்.



இவ்வாறு தென்னை மரங்கள் இலை கொட்டி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமையால் தென்னையில் இருந்து எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தென்னை இலைகளின் பச்சையம் இல்லாமல் நாளுக்கு நாள் தென்னை மரங்கள் பழுதடைந்து வருவதாகவும் தெங்கு செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஒரு ஏக்கரில் 2500 தேங்காய்களை பறித்த தாங்கள் தற்போது ஐநூறு தேங்காய்களை கூட பறிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

எனவே, இலை கொட்டி நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெங்கு செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் ஆளுமை விருத்திச் செயற்றிட்டம்





களுத்துறை மாவட்டத்திலுள்ள, மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களின் மொழித்திறன் மற்றும் கணித எண்ணக்கரு விருத்தி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமய ஒழுக்க விடயங்கள், சுகாதார பழக்க வழக்கங்கள் மற்றும் கற்றல் செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் மாணவர்களின் ஆளுமை விருத்தி செயற்றிட்டமொன்று அண்மையில் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் றிப்கான் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில பாட விரிவுரையாளர் என். சிவச்செல்வன் தலைமையிலான பயிற்சி ஆசிரியர்களான ஆர்.கே. சாலினி, எம்.எப். சுமையா, எம்.ரீ.எப். ஸப்ரா ஆகிய ஆசிரிய பயிலுநர்கள் இச்செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து நடத்தினர். மேற்படி செயற்றிட்டமானது மாணவர்களுக்கு சிறந்த பயன்மிக்கதாக அமைந்ததோடு சிறந்த மாணவர் சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் பாடசாலை அதிபர் றிப்கான் தெரிவித்தார்.

## தினகரன் விளம்பர பகுதி முன்னாள் ஊழியர் காலமானார்



தினகரன் பத்திரிகையின் ஒப்புநோக்குனர் பிரிவில் கடமையாற்றிய லீலா சந்திரா பெர்னாந்து நேற்று முன்தினம் (12) காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9.00 மணி முதல் பி.ப 3 மணிவரை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.



பேருவளை சீனன்கோட்டை ஸகாத் கமிட்டியின் புதிய அலுவலகம் சீனன்கோட்டை 'ஜெம் டவர்' கட்டிடத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ஸகாத் கமிட்டியின் தலைவர் எம்.எஸ்.எம். றஸ்வி ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸகாத் கமிட்டி உறுப்பினர்கள், சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் உட்பட உறுப்பினர்கள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். படம்: பேருவளை விசேட நிருபர்

# வெள்ள நிவாரண பணிகள் மேற்கொள்ளப்படாமல் பாக். மக்கள் பரிதவிப்பு



பாகிஸ்தானில் ஏற்பட்ட கடும் மழை, திடீர் வெள்ளம் காரணமாக பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு அரச நிவாரணங்கள் கிடைக்காமல் நிர்க்கதியாகி உள்ளனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

மழை விட்ட பின்னரும் சிந்து மாகாணத்தின் கம்பார் ஷதாகோட் மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதியாக விளங்குவதாகவும் இப்போதும் கடல் போல தண்ணீர் தேங்கிக் கிடப்பதால் நிவாரண உதவிகள் மற்றும் குடிநீரின்றியும், பசியும் பட்டியுனுமாக மக்கள் பரிதவிப்பதாகவும் நிலைமைகளை நேரில் விசாரிக்க அரச அதிகாரிகளோ அல்லது அரசியல்வாதிகளோ இதுவரை வந்ததாகத் தெரியவில்லை என்றும் மக்கள் கூறுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குடிநீர் இல்லாத நிலையில் தேங்கிக் கிடக்கும் வெள்ள நீரையே குடிப்பதற்கும், குளிப்பதற்கும், துவைப்பதற்கும் பயன்படுத்தும் நிலையில் தொற்று நோய்கள் பரவக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அறிய முடிகிறது.

பாக். அரசு தாம் நிவாரணப் பணிகளில் வேகமாக செயல்படுவதாக அறிவித்துள்ள போதிலும் உண்மை நிலவரம் அவ்வாறு இல்லை என்று கூறும் பாதிக்கப்பட்ட தரப்பினர், கூடாரங்கள் கிடைக்காத நிலையில் தாம் தார்பாய்களை கூடாரமாக பயன்படுத்துவதாகவும் விமான மூலமான சேத அளவீடு நடைபெறுவதாக இல்லை என்றும் கூறுவதோடு அரசு அறிவித்துள்ள 25 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் கூடாரங்களை விலை கொடுத்து வாங்க வேண்டியிருப்பதாகவும் புகார் தெரிவித்துள்ளனர்.

## ஆயுதங்களுடன் சென்ற லொறி மஹியங்கனையில் விபத்து

*அக்குறணை குறூப் நிருபர்*

குண்டசாலை பொலிஸ் பயிற்சி பாடசாலைக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற லொறி விபத்துக்குள்ளாகியுள்ளது.

T56 துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றே கண்டி மஹியங்கனை வீதியின் 18ஆவது வளைவு பகுதியில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகியது.

குண்டசாலை பொலிஸ் பயிற்சிக் பாடசாலையில் பொலிஸ் பயிலுனர்களுக்கு துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி வழங்க எடுத்துச் செல்லப்பட்ட ஆயுத லொறியே மஹியங்கனை 11ஆவது வளைவுக்கு அருகில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பயிற்சிக்கு தேவையான T56 துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களே மேற்படி லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. இந்த விபத்தில் காயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த போது, சப்இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகள் வாகனத்தில் பயணம் செய்துள்ளனர்.

## கேள்விகளிற்கான அழைப்பு

### மாகாண விவசாயத் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்
### (வீவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்)

சப்ரகமுவ மாகாண விவசாயத்திணைக்களத்திற்கு கீழ்காணப்படும் உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொண்டு வந்து ஒப்படைப்பதற்காக, மாகாண விவசாயத்திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படி | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | துணிக்கைகளாக்கும் இயந்திரம் | 07 | 1,000.00 | 42,500.00 |
| 02 | வாயு துப்பாக்கிகள் | 167 | 1,000.00 | 63,500.00 |
| 03 | மின்சார வேலி | 94 | 1,000.00 | 35,600.00 |
| 04 | பொலிசெக் உறைகள் | 84,500 | 2,000.00 | 80,000.00 |

1. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், (தொலைபேசி எண் - 045-2222356) 2022.09.14 முதல் 2022.10.04 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை மேற்கொண்டு கீழ்க் காணப்படும் முகவரிக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத கட்டணத்தைக் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
2. அனைத்து விலைமனுதாரர்களும் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம், குறித்த பெறுமானத்திற்கான மத்திய வங்கியில் பதிவு செய்யப்பெற்றுள்ள அங்கீகாரம் பெற்றுள்ள வங்கியொன்றிலிருந்து, 'பணிப்பாளர் - சப்ரகமுவ மாகாண விவசாயத்திணைக்களம் - முவகம, இரத்தினபுரி' என்ற பெயருக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட (Unconditional, On demand) கேள்விப் பிணையமொன்று (மாதிரிப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) அல்லது 'மாகாண விவசாயப் பணிப்பாளர், சப்ரகமுவ' இற்கு காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு, கேள்விப் பிணையமொன்றாக பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பிணையமானது, 2022.10.05 முதல் 2023.02.02 வரை செல்லுபடியாகுதல் வேண்டும். குறித்த காலம்/ பெறுமானம் பிழைகளின்றிய மற்றும் மாதிரிப்படிவத்தின் நிபந்தனைகளிற்கு முரணான விலைமனுப் பிணையங்கள் நிராகரிக்கப்படும். குறித்த கேள்வியின் கருமம் குறிப்பிடப்படல் வேண்டும்.
3. கேள்விகளைச் சமர்ப்பிக்கையில் எங்களால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களை நன்கு வாசித்து, அதன்பிரகாரம் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதற்கான அனைத்து நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்விப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
4. முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளாக 2022.10.05 அன்று மு.ப. 11.00 இற்கு முன்னர், விவசாயத்திணைக்களப் பெறுகைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியவாறு, கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது திணைக்களத்தின் கேள்விப் பெட்டியில் சேர்த்தல் மேற்கொள்ளலாமென்பதுடன், விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்றுள்ள பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
5. கேள்வியை ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது கேள்வியின் பகுதியொன்றை மாத்திரம் ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக்குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாகாண விவசாயத் திணைக்களம்**
**முவகம, இரத்தினபுரி.**
**045-2222356**
**2022.09.14**

## விலைமனுக்கோரல்

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

### கேள்விப்பத்திர இலக்கம்: 044/T/2022

### ஹஷாமா கட்டுமான நிறுவனத்தின் அலுவலக கட்டிடம் மாற்றம் செய்தல் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க

தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 02 இன் மூலம் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) தனியார் கம்பனி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வளாகத்தின் ஹஷாமா கட்டுமான நிறுவனத்தின் அலுவலக கட்டிடம் மாற்றம் செய்வதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைகளைக்கொண்ட பொருத்தமான விலைக்கூறுநர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை : 60 நாட்களாகும்.

கருத்திட்டங்கள் அமைவிடம் : பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க

தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும், இந்த விலைக்கேள்வியாளர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின், கட்டிட கட்டுமானம் தொடர்பாக C4 மற்றும் C5 (C-4 or C-5) தரங்களில் பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, **2022.09.14** முதல் 2022.09.26 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் **மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00** மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், கிளைத்தலைவருக்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுவதன் மூலம் மற்றும் கேள்விப்பத்திர கட்டணமாக திருப்பி தரப்படாத **ரூபா 10,000.00 (பத்தாயிரம் ரூபா)** காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிட முடியும்.

கேள்விப்பத்திர உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக அந்த கேள்விப்பத்திர ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்ட **ரூபா 240,000.00** (இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம்) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் 05 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியொன்று அதற்கு சமனான உத்தரவாதம் (தேவையேற்படும் பட்சத்தில் பணமாக மாற்றக்கூடிய) அக்குறித்த விலைக்கேள்வி சமரப்பித்தல் வேண்டும்.

**2022.09.20 ஆந் திகதி மு.ப 10.00** மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் நிர்வாகக் கட்டிட தொகுதியின் 4 ஆம் மாடியில் அமைந்துள்ள சிவில் பொறியியல் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின் கலந்துரையாடும் அறையில் நடைப்பெறும் ஆரம்ப விலைக்கேள்வி கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரப்பூர்வமான பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள், பிரதியொன்றுடன் **2022 செப்டம்பர் 27 ஆந் திகதி பி.ப 02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், பெறுகைக் குழு இலக்கம் 2, தவிசாளருக்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரப்பூர்வமான பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 0112263502/3506 - என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக மற்றும் தொலைநகல் இலக்கம் 011 2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்**
**கட்டுநாயக்க.**

## கேள்வி கோரல் அறிவித்தல்

### ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல் - 2023

### உடுபத்தாவ பிரதேச சபை

உடுபத்தாவ பிரதேச சபைக்கு உரித்தான ஆதனங்களை 2023.01.01 முதல் 2023.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக கொள்வனவாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2022.09.14 முதல் 2022.10.04 அன்று மு.ப. 10.30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. 2022.09.14 முதல் 2022.10.04 அன்று மு.ப. 10.00 வரை உடுபத்தாவ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் இதற்கான படிவங்களும் அட்டவணைகளும் வழங்கப்படும். கேள்விக்கான படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் மற்றும் கேள்வி வைப்புத்தொகை செலுத்தப்படல் வேண்டும்.

1. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளாக வழங்கப்படுவதுடன், அவற்றைப் பூரணப்படுத்தி தனித்தனி இரண்டு உறைகளில் சேர்த்து அவற்றின் இடது பக்க மேல் மூலையில், 'மூலப் பிரதி' 'நகல் பிரதி' எனக் குறிப்பிட்டு அவற்றை ஒருறையில் உள்ளிட்டு, அதன் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு 'செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ' என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
2. கேள்விகளை நேரில் ஒப்படைக்க ஆர்வமுள்ளவர்கள், அவ்விரு பிரதிகளையும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உறைகளைத் தயாரித்து பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.
3. கேள்விகளைத் திறத்தல்:-
   2022.10.04 அன்று மு.ப. 11.00 இற்கு உடுபத்தாவயிலுள்ள உடுபத்தாவ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெறுகைக்குழுவின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்வி விண்ணப்பதாரர்கள் அல்லது எழுத்துருவ அதிகாரம் அளிக்கப்பெற்ற அவர்களின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
4. மேலதிக விபரங்களை கீழ்க்காணப்படும் தொலைபேசி இலக்கங்களை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

   தொ.பே.இல. அலுவலகம் - 0372286577
   வருமானப்பிரிவு - 037-4947087

**எச்.எம். ராஜ். சிசிரகுமார**
**தலைவர்**
**உடுபத்தாவ பிரதேச சபை**

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை – பதுளை

### பெறுகை அறிவித்தல்

1. பதுளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் ஆரம்ப கண்காணிப்பு சேவையை மேம்படுத்தும் திட்டம் (PSSP) இன் கீழ் கீழ்க்காணும் மருத்துவ மற்றும் வேறு உபகரணங்களை வழங்குதல், கொண்டு வந்து ஒப்படைத்தல் மற்றும் நிறுவுவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து 2022 செப்டம்பர் 14 முதல் 2022 ஒக்டோபர் 05ம் திகதி வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | விபரம் | அளவு | கேள்விப் பிணைப் பெறுமதி | மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | **Medical Items** | | | |
| | ***Package No 01. Dental*** | | | |
| 01. | Light cure Machine | 02 | 40000/= | 3500/= |
| 02 | Ultrasonic Scalar | 02 | | |
| | ***Package No. 02. Lab Item*** | | | |
| 01. | Laboratory Auto calve | 01 | 27000/= | 2500/= |
| 02. | Slide Storing Cabinet | 02 | | |
| | ***Package No. 03. CSSD*** | | | |
| 01. | High-pressure Sterilizer | 02 | 210,000/= | 7,500.= |
| 02. | Washer (25 kg) | 03 | | |
| 03. | Dryer (25Kg) | 03 | | |
| | ***Package No. 04. Eye*** | | | |
| 01. | AB Scanner | 01 | 180,000/= | 7,500/= |
| 02. | Slit Lamps-Eye Units | 02 | | |
| 03. | Slit Lamps -Screening | 10 | | |
| 04. | Ophthalmoscopy Micros table | 02 | | |
| 05. | Ophthalmoscopy Micros Cope | 01 | | |
| | ***Package No. 05. Machineries*** | | | |
| 01. | Infant Incubator | 02 | 150,000/= | 6,000/= |
| 02. | Infant Warmer | 03 | | |
| 03. | CTG Machine | 08 | | |
| 04. | ECG Machines | 15 | | |
| | ***Package No. 06. PM Item*** | | | |
| 01. | Autopsy Table | 01 | 50,000/= | 4,000/= |
| 02. | Mortuary Cooler (Two Body) | 03 | | |
| | **General Items** | | | |
| | ***Package No. 07. Electrical Item*** | | | |
| 01. | Pedestal Fan | 40 | 62,000/= | 3,000/= |
| 02. | Domestic Refrigerator | 50 | | |
| | ***Package No. 08. Furniture*** | | | |
| 01. | Office Table Steel | 50 | 110,000/= | 5,000/= |
| 02. | Steel Cupboard | 50 | | |
| 03. | Iron Glass Cupboard | 30 | | |
| 04. | File Cupboard -Steel | 35 | | |
| 05. | Mattress | 200 | | |
| 06. | Counter Chair | 20 | | |
| | ***Package No. 09. Container*** | | | |
| 01. | Container Storage Space (40 foot) | 03 | 120,000/= | 6,000/= |
| | ***Package No. 10. Solar System*** | | | |
| 01. | 5 KW | 30 | 180,000/= | 7,500/= |
| 02. | 10 KW | 12 | | |

02. கேள்வி ஆவணங்கள் கீழே காணப்படும் வகைகளை சமர்ப்பித்து 2022 செப்டம்பர் 15 முதல் 2022 ஒக்டோபர் 04 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பதுளை, மஹியங்கன வீதி, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
    அ. பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூல விண்ணப்பம்.
    ஆ. பதுளை, மஹியங்கனை வீதி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு
03. பெறுகை ஆவணங்களை அலுவலக நேரங்களில் பதுளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2022 ஒக்டோபர் 05 பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதுளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
05. கேள்விகள் திறத்தல் 2022 ஒக்டோபர் 05 பி.ப. 2.30 இற்கு இடம் பெறுவதுடன் அவ்வேளையில் சமுகமளிக்குமாறு கேள்விதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
06. குறித்த பெறுகை சம்பந்தமான கேள்விக்கு முன்னரானா கலந்துரையாடல் 2022 செப்டம்பர் 26 பதுளை, மஹியங்கனை வீதி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் மு.ப. 10.00 இற்கு நடைபெறவுள்ளது.
07. இதுபற்றிய மேலதிக விபரங்களை, தொ.பே.இல. 055-2223581, 055-2222430 மூலம் பெற்றுக்கொள்ளலாம் பெறுகைக் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**மஹியங்கனை வீதி, பதுளை.**
**2022.09.14**

# தேசாபிமானி விருது வழங்கல்



இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையினால் (10) கொழும்பு பாண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய மாநாட்டின் போது விருதோடை கிராமத்தை சேர்ந்த சமூக சேவையாளர், கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.எம். ஆஷிக் தேசாபிமானி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எட்வர்ட் வழங்கி வைத்தபோது,...

# தாய் மொழியோடு சிங்கள மொழி ஆளுமைக்கு வலு சேர்க்கும் அக்குறணை பிரதேச சபை தவிசாளர்







***மாவத்தகம தினகரன் நிருபர்***

தேசிய சகவாழ்வு மற்றும் தேசிய புரிந்துணர்வை வலுப்படுத்தும் நோக்கில் இலவசமாக வழங்கப்படும் சிங்கள இரண்டாம் மொழிப் பயிற்சி கண்டி மாவட்டத்தில் வெற்றிகரமான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்.

தேசிய சகவாழ்வையும் மற்றும் தேசிய புரிந்துணர்வையும் வலுப்படுத்தும் நோக்கில் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீனின் வேலைத் திட்டத்திற்கிணங்க சிங்கள மொழிப் பயிற்சி நெறியை நிறைவு செய்த தெவிநுவர கல்வி வலயத்திற்குட்பட்ட குருக்குத்தல முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர் மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கடுகன்னாவ குறுக்குத்தல அருனோதய சங்கத்தின் ஏற்பாட்டில் இலவசமாக நடத்தப்பட்ட இந்தச் சிங்கள மொழிப் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் அதிபர் ரீசா ஷரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். கௌரவ அதிதியாக கலந்து கொண்ட அலவத்துக்கொடை கொனகலகல விஹாராதிபதி சிங்கள மொழிப் பயிற்சியை நிறைவு செய்த பாடசாலை மாணவர்களுக்கு பணப் பரிசுகள் வழங்கி வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,...

தாய் மொழியோடு சிங்கள மொழியையும் விளங்கியிருந்தால் அது தனிமனித ஆளுமைக்கு வலு சேர்ப்பதாக இருக்கும். அரச அலுவல்களை இலகுவாக முடிப்பதற்கு மிகப் பிரயோசனமானதாக அமையும். அவை மட்டுமல்ல இரு சமூகங்களுக்கிடையே ஒற்றுமையையும் பரஸ்பரப் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கான ஒரு சிறந்த ஊடகம் என்றார்.

## களனிப் பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| திகதி | : 2022 செப்டெம்பர் 14ஆம் திகதி |
| கடன் மற்றும் தலைப்பு | : கடன் 3698/3699- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | : MOE/STHRD/KE-E15: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள பொறியியல் வேலைத் தளத்திற்கான இயந்திராதிகளின் பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | : 2022 ஒக்டோபர் 12ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |

## விலைக்கோரலுக்கான அழைப்பு

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து **(ADB)** கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் **(ADB)** வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. களனி பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்டப் பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் MOE/STHRD/KE-E15: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள வேலைத்தளத்திற்கான இயந்திராதிகளின் பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது களனி பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள உத்தேச பொறியியல் வேலைத் தளத்திற்கு இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பதை அடக்குகின்றது.

   வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவை ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 120 நாட்களாகும்.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| லொட் இல. | விபரங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குனராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (5 வருட காலமானது 2017-10-13ஆம் திகதி முதல் 2022-10-12ஆம் திகதி வரையுமாகும்) | கடந்த மூன்று வருடங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. (இல. ரூபா) |
|---|---|---|---|---|
| Lot 1 | 3D Printer (FDM Type) | 01 | 360,000.00 | 1,440,000.00 |
| Lot 2 | Universal Milling Machine | 01 | 2,870,000.00 | 11,500,000.00 |
| Lot 3 | Shaping Machine | 01 | 2,380,000.00 | 9,520,000.00 |
| Lot 4 | Lathe Machine | 06 | 12,000,000.00 | 48,000,000.00 |
| Lot 5 | Stand Drilling Machine | 01 | 1,090,000.00 | 4,350,000.00 |
| Lot 6 | Power Hack Saw | 01 | 1,500,000.00 | 6,000,000.00 |
| Lot 7 | 3 IN 1 Universal Sheet Shearing, Bending and Rolling Machine with Stand | 01 | 750,000.00 | 3,000,000.00 |
| Lot 8 | Manual Sheet Metal Shearing Machine | 01 | 50,000.00 | 200,000.00 |
| Lot 9 | Bench Grinder | 04 | 240,000.00 | 960,000.00 |
| Lot 10 | Universal End Mill Cutter and Drill Bit Grinder Sharpener | 01 | 297,000.00 | 1,190,000.00 |
| Lot 11 | Bench Drill | 05 | 200,000.00 | 800,000.00 |
| Lot 12 | Bench Vice | 10 | 250,000.00 | 1,000,000.00 |

அதிகமாக பதிலளிக்கக்கூடிய மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கோரல்கள் மற்றும் இறுதிப் பொருட்களின் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் விலைமனு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனி பல்கலைக்கழகம், 407, கண்டி வீதி,**
**களனி, இலங்கை.**

**தொலைபேசி : +94 (0)11 2984879**
**தொலைநகல் : +94 11 2984879**
**மின்னஞ்சல் : dpd-sthrd@kln.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "MOE/STHRD/KE-E15: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள வேலைத் தளத்திற்கான இயந்திராதிகளின் பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவை செலுத்துதல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2022 ஒக்டோபர் 11ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 செப்டெம்பர் 26ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இலங்கை, களனி, 407, கண்டி வீதி, களனி பல்கலைக்கழகத்தின் கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடத்தின் கூட்ட அறையில் இடம்பெறும்.
8. 2022 ஒக்டோபர் 12ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம், களனி பல்கலைக்கழகம்,**
**407, கண்டி வீதி, களனி,**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE-E15: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் பீடத்திலுள்ள வேலைத் தளத்திற்கான இயந்திராதிகளின் பெறுகை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**கல்வி அமைச்சு,**
**363E, ஹோகந்தர வீதி,**
**தலங்கம வடக்கு,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல, இலங்கை.**

**திகதி: 2022 செப்டெம்பர் 14**

## கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்
## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## விலை மனுக்கோரல் (IFB)

## கடலோர பாதுகாப்பு கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான இயந்திரங்களை வழங்குதல்

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களத்தின் சார்பாக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட **கட்டுமான கடலோர பாதுகாப்பு கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான இயந்திரங்களை வழங்குவதற்கு** தகுதியான மற்றும் பதிவுசெய்யப்பட்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. ஒவ்வொரு பெறுகையும் தனிப்பட்ட மற்றும் சுயாதீனமான பெறுகை நடவடிக்கையாகும்.

| செயற்திட்டத்தின் பெயர் மற்றும் இலக்கம் | வழங்கல் விபரம் | விலைமனு உத்தரவாதம் | விலைமனு செல்லுபடியாகும் காலம் | மாகாணம் | மனுப் பாதுகாப்பு |
|---|---|---|---|---|---|
| பொருதொட்ட தொடர் கொயின அணை - 03 கட்டுதல் CCD/CD/2021/55 | 300 மணித்தியாலயத்திற்கு 20 டன் அகழ்வு இயந்திரம்<br>240 மணித்தியாலயத்திற்கு கியூப் லோடர் இயந்திரமொன்று | ரூ.18,000.00<br>ரூ.13,920.00 | 63 நாட்கள் | கம்பஹா | பிரதேச பொறியியளாலர் (கொழும்பு வடக்கு) 031-2238400 |
| அம்பலாங்கொட, ஹிரேவத்த கப்பல்துறை மீள்கட்டுமானம் CCD/CD/2021/83 | 150 மணித்தியாலயத்திற்கு 20 டன் அகழ்வு இயந்திரம் | ரூ.16,750.00 | 63 நாட்கள் | காலி | பிரதேச பொறியியளாலர் (காலி) 091-2234832 |

2. மனுக்கோரலானது **தேசிய மனு கோரல் போட்டி (NCB) முறைக்கமைய** நடைபெறும். ஒவ்வொரு கொள்முதல் செயல்முறைக்கும் தனித்தனியாக விலைமனு ஆவணம் வழங்கப்படும்
3. ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய மனுதாரர்களின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் (Black Listed) இடம் பெறாதிருத்தல் வேண்டும் என்பதுடன் **1987 இலக்கம் 03 ஆம் ஒப்பந்தச் சட்டத்தின்படி தமையினை கொண்டிருத்தல் வேண்டும்.**
4. ஒப்பந்தத்திற்கு தகுதி பெற்றுக்கொள்வதற்கு, மனுதாரரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தமது விமைனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும். இப்பொழுதும் 2022 ஆண்டிற்காக திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டிருக்கும் வழங்குனர் எனில் இவ்வாணங்கள் அவசியமில்லை.

   **(அ). கனரக வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு**

   (ஆ). டிப்பர் வாகனம், லோடர்கள், வீல் எக்சவேட்டர், உயர் மற்றும் குறைந்த அடி டிரெய்லர்கள் மற்றும் டம்ப் ட்ரக்குகளின் சான்றளிக்கப்பட்ட பட்டியலுடன் வாகன இயந்திரங்களின் பதிவுச் சான்றிதழ்களின் நகல்கள்

   (இ). கடந்த 05 ஆண்டுகளில் எமது திணைக்களத்தில் அல்லது வேறு ஏதெனும் நிறுவனத்தில் செய்யப்பட்ட வழங்கல் தொடர்பான விபரங்கள்

   (ஈ). இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்களின் உரிமைக்கான சான்றிதழ்களின் நகல்கள்

   (உ). வாகன காப்பீட்டு சான்றிதழ்களின் நகல்கள்

   (ஊ). வணிகப் பதிவுச் சான்றிதழ்கள், வ.சே.வரி (VAT) பதிவுச் சான்றிதழ்களின் நகல்கள்
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட பொறியியலாளர், (கரையோர அபிவிருத்தி) **கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம், நான்காம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 இல் பெற்றுக்கொள்ள கூடியதுடன், எந்தவொரு அலுவலக நாட்களிலும் 09.00 மணி முதல் 15.00** மணிவரை ஆவணங்களை பரிசீலனை செய்துக்கொள்ள முடியும். மனுதாரருடன் தொடர்பான அதிகாரியை தொலைபேசி இலக்கம் **: 011 2472622 / 011 2387920** மற்றும் தொலைநகல் **: 011 2387920** மூலமாக தொடர்புகொள்ளவும்.
6. மனுதாரர்கள் நிறுவனத்தின் முக ஏட்டில் சிரேஷ்ட பொறியியலாளர், (கரையோர அபிவிருத்தி) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களத்திடம் எழுத்துப்பூர்வமான கோரிக்கையினை சமர்ப்பித்து, மீள்செலுத்தப்படாத **ரூ.1,000.00** கட்டணத்தினை **2022.09.14** ஆம் திகதியிலிருந்து **2022.09.28** ஆம் திகதி **09.00 மணி முதல் 15.00** வரையான காலப்பகுதியினுள் செலுத்துவதன் மூலம் மனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
